# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, தை 23உ (6-2-72) ஞாயிறு 1391 ஜுஹஜ் 20 புத்தகம் 25 இதழ் 11


### செல்வாவின் உறுதி!

'எனக்கு இப்போது 73 வயது ஆகிவிட்டது; எனக்குப் பேச்சு வலிமையும் குறைந்துவிட்டது. ஆயினும், தமிழரசு இயக்கத்தை துவக்கியபோது எனக்கிருந்த துணிவு இன்னும் அப்படியே தான் இருக்கிறது. எத்தகைய துன்பத்தை சந்திக்கவும் நான் தயாராகவே இருக்கிறேன்; எனது மீதிக்காலத்தை சிறையில் கழிக்கவும் நான் சித்தமாகிவிட்டேன்.

—தந்தை செல்வா.

# ஆட்சிக்கு இறுதி சந்தர்ப்பம்!

## சுயாட்சித் தமிழரசு மறுக்கப்படின்

## சுதந்திரத் தமிழரசு நிறுவும் நிர்ப்பந்தம் ஏற்படும்!

தணிக்கை



தணிக்கை

## தலைவர் இராசமாணிக்கம் முழக்கம்!

"சிங்கள மக்கள் தாம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து பூரணமாக விடுதலை பெறும் வைபவத்தை தங்கள் புராதன இராஜதானியாகிய கண்டியில் கொண்டாடப் போகின்றார்கள். 1815ம் ஆண்டு மார்ச் மாதம் 2ந் தேதி, கண்டியில் இறக்கப்பட்ட சிங்கள இறைமையின் சின்னமாகிய சிங்கக்கொடி இவ்வாண்டு மார்ச் மாதம் 2ந் திகதி மீண்டும் அங்கு ஏற்றப்படப்போகின்றது. சிங்கள மக்கள் தம் இழந்த உரிமையை மீண்டும் பெறுவதை நாம் ஆட்சேபிக்கவில்லை. அதை வரவேற்கின்றோம். ஆனால் அவர்கள் தம் உரிமையை முழுமையாகப் பெறுகின்ற அதே செயலினால் தமிழினம் முழுமையாக அடிமையாக்கப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த இராஜதானியாகிய யாழ்ப்பாணத்தில் கூடிநிற்கும் உங்களைப் பார்த்து, நான் கேட்க விரும்புவது ஒரேயொரு கேள்விதான். சிங்கள மக்கள் தாம் இழந்த இறைமையை மீண்டும் பெற்றதுபோல, தமிழ் மக்களும் தம் இறைமையையும், உரிமையையும் பெறப்போகின்றார்களா? அன்றேல் தம் வருங்காலச் சந்ததிகளை மீளா அடிமைகளாக அழியவிடப் போகின்றார்களா? எந்த விலை கொடுத்தும் எம் சுதந்திரத்தை பெற்றே திருவோம் என்றே நீங்கள் பதிலளிப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

தமிழினத்தை அடிமையாக்கும் இவ்வரசியற் திட்டத்தை முற்றாக நிராகரிப்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை. கண்ணினுமினிய சுதந்திரம் காணும் இம் முயற்சியில் கட்சி பேதங்களை மறந்து சாதி, சமய பிரதேச வித்தியாசங்களை ஒதுக்கி ஒன்றுபட்டுச் செயலாற்ற வருமாறு தமிழினத்தின் ஆண், பெண், இளைஞர், முதியோர் அனைவரையும் அழைக்கின்றேன். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக, நாடாளுமன்றத்



தில் வீற்றிருக்கும் எவரும், இவ்வடிமைச் சாசனத்தில் ஒப்பமிடாது தடுத்து நிறுத்த வேண்டியது எமது இனத்தின் கடமையாகும்.

"எமக்கு முன் இரண்டு மார்க்கங்களே உள்ளன. ஒன்று நாம் இதுகாறும் கோரி வந்திருக்கும் சமஷ்டி அமைப்புக்கு உட்பட்ட சுயாட்சித் தமிழரசாகும். அதையே நாம் மீண்டும், மீண்டும் கோரி நிற்கின்றோம். அதை சிங்களத் தலைவர்களும், அரசாங்கமும் தொடர்ந்தும் நிராகரித்து வருவார்களானால், எமது சுதந்திரத்தை நிலைநாட்ட, தன்மானத்தைக் காக்க, எம் இனத்தை அழிவிலிருந்து பாதுகாக்க, ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் வழங்கிய பதவிகளை உதறினர் நடராசா!



அரசாங்கத்தினால் தமக்கு வழங்கப்பட்டிருந்த சமாதான நீதவான், உத்தியோகப் பற்றற்ற நீதவான் (ஜே. பி. யூ. எம்) ஆகிய பதவிகளை தாம் உதறியெறிந்து விட்டதாக 30. 1. 72ல் யாழ். மாநகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசு மாநாட்டில் முன்னாள் முதலை உறுப்பினர் திரு. க. நடராசா மக்களின் பலத்த கரகோஷத்திடையே அறிவித்தார்.

திரு. நடராசாவின் முன் மாதிரியைத்தொடர்ந்து பலர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

## 'பிரிவினைப் பாதையில் தமிழினம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது!

### சொந்தத் தாயகத்தில் வளமான வாழ்வுகாண வடக்கு, கிழக்குக்கு உடைமைகளை மாற்றுவீர்!'

## தமிழரசு சிறப்பு மாநாட்டின் அறைகூவல்!

வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு போன்ற பல்வேறு பகுதிகளையும் சார்ந்த தமிழ் மக்கள் உணர்ச்சி மயமாக— வெள்ளம் போல் திரண்டு நின்று கடலொலிபோல் கரவொலியெழுப்பி பலத்த ஆரவாரத்துடன் வரவேற்க— 30. 1. 72ல் யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாட்டில், தமிழரசுத் தந்தை செல்வா அவர்களினால் முன்மொழியப்பட்டு, திருகோணமலை ப. உ. திரு. பா. நேமிநாதனால் வழிமொழியப்பட்டு ஏக [illegible]

"இந்நாட்டை ஓர் குடியரசாகப் பிரகடனம் செய்து அந்நிய ஏகாதிபத்தியங்களோடு எமக்குள்ள கடைசித் தொடர்பைத் துண்டிக்க ஓர் புதிய அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்நேரத்தில், 1972ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் கூடியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாடு இவ்வரசியல் திட்டத்தை முற்றாக நிராகரிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது—

1; 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிங்கள மக்கள் அளித்த கட்டளையை நிறைவேற்றுவதாகக் கூறும் அதே நேரத்தில், 1956ம் ஆண்டு தொடக்கம் அடுத்த ஐந்து பொதுத்தேர்தல்களில் தமிழ் மக்கள் மிகப் பெரும் பான்மையான வாக்குகள் மூலம், இந்நாட்டில் தமிழ் மக்கள் தம்மைத்தாம் ஆளக் கூடிய ஓர் சுயாட்சித் தமிழரசை ஐக்கிய இலங்கைச் சமஷ்டியில் ஓர் அங்கமாக நிறுவவேண்டுமென்று விடுத்துவந்த கோரிக்கை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு தமிழ் தேசிய இனத்தின் அடிமைத்தனம் இறுக்கப்பட்டிருக்கிறது.

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# அண்ணு கவிதாஞ்சலி



முத்தமிழ் முடி சூடி முடிவில்லா வாழ்வுகொண்டாய்
எத்தமிழ்ச் சொல்லினே ஈங்குன்னோரியம்பினும்—
அண்ணு உன்போல்
பைந்தமிழ் ரசத்துடன் செந்தமிழ்ச் சொல்தரும்
வண்டமி ழாளரு முண் டோ இவ்வுலகில்?

—வளலாயூர் வளவைத்தம்பி.

★

அண்ணுவென்ருெரு தமிழ் உழவன் அவன்
அனைத்து முலகத் தமிழுணர்வைப்
பண்ணுர் மொழியில் பயிற்றிவைத்தான் மலேப்
பார மதற்கு யீடாமோ
தண்ணுர் தமிழின் தமிழ் மணத்தைமேற்கு
தங்கும் நாட்டிலும் புகழவைத்தான்
அண்ணுவென்ற மூன்றெழுத்தும் தமிழ் அறிஞர்
நாவில் தவழ விட்டான்.

—விடத்தல் தீவு எம். பி. எம். முகமதுக் காசிம்
ஆலிம் ஜே. பி.

★

தித்திக்கும் தமிழ்ப்பேச்சால் எத்திக்கும் புகழ்பரப்பி-தமிழ்
வெற்றிக்கு வித்திட்ட அண்ணு வாழி
புத்துணர்ச்சி பெற்றிராத புறத்தமிழர் வாழ்விற்கு - உள்ள
நற்கருத்தைப் போதித்த அண்ணு வாழி
தத்துவத் தமிழ்பேசி தாய்மொழியாம் - நமது
தமிழ் துலங்க வழி வகுத்த அண்ணு வாழி
முத்துத் தமிழால் முத்தமிழைப் பொழிந்திட்ட - நல்ல
கற்ருேரும் போற்றுகின்ற அண்ணு வாழி
முத்தமிழகத்தினில் முடிசூடா மன்னனுய் - எமக்கு
புத்துலகம் சமைத்திட்ட அண்ணுவாழி
பித்துப் பிடித்துத் தினம் தமிழ்மேலே - தமிழ்
முத்தை வழங்கிடும் அண்ணு வாழி
நித்தம் நித்தம் தமிழ்ப்பேச்சால் - உயிரை
தத்தம் செய்த அண்ணு வாழி! வாழி!!

—இரட்டையர்—
(கோணேநகர்த் தமிழணி இயக்கம்)

★

பாரதிபோற் பாரதிதாசன் தனைப்போல்
பகுத்தறிவுப் பாவிசைத்த புலவரில்லை!
ஆரெதிரில் கோதிடுவார் அறிவுச் செல்வர்
அவர் நிகார்த்த தமிழ்ப்புலவரிங்குண்டென்று,
நேருவிற்கு நிகரான தலைவர்யாரும்
நீர் புவியில் உண்டோவென்றெண்ணுதல்போல்,
பாரினிலே பகுத்தறிவுப் பிரச்சாரஞ் செய்
பண்புமிக்க தமிழ்த்தலைவரண்ணு வன்ருே!

— மதிவாணர், மண்டை தீவு.

★

இலக்கியத்தில் இனிய நறும் தென்றலாக
எழுத்தினிலே 'இங்கர்ஸால்' தோற்றுப்போக
கலக்கி விட்டார் கவிதையிலே கனிந்தசாறு
கனித்தமிழின் சுவையுடனே கருத்துரைகள்
கடலெனவே பொங்கிவந்து கதைகள் சொல்ல
கவியாகிக் கதையாகித் தமிழாகிநிற்கும்
அடலேறு பேரறிஞர் அமரர் அண்ணு
அகிம்சைவழி அன்புநெறிசெல்வோம் வாரீர்.

—நோ. இராசம்மா.

★

அடுக்குமொழி அச்சமின்மை ஆணி முத்து
அரசியலிற் ஆர்ப்பரிக்கும் கட லோதம்
மிடுக்குநடை மேகத்திரழ் மின்னி யக்கம்
மேடையிலே மெஸ்மரிசப் பேச்சு வன்மை
துடுக்குத்தனம் தூஷணம் துஞ்சாச் செயல்
தொன்மர பெம்மினப் பண்பு வழி
அடக்குமுறைக் கஞ்சாத்திறன் அன்பு ருவம்
அறநெறி அகிம்சைவாதி அறிஞ ரண்ணு!

—மொழிமலைநாதன்.

★

தமிழறிஞர்க்குக் குறைவில்லை இத்தவத்திருநாட்டில் - ஆனுல்
தமிழை மறந்தவர் தடுமாறி நின்ருர் தங்கத்
தமிழ்காட்டி தமிழர் தனிவாழ்வு வாழ
தலைமகனே நீவந்துதித்திடென் அண்ணு!

— இணுவை இரகு சி[illegible]

தமிழகத் தலைமகன்
தமிழ் காக்கும் தளபதி
கலைஞர்கள் காவலன்
கற்பனையின் பேருற்று
வண்டாடும் புதுமலர்
வானுயர் பேச்சாளன்
புதுமைகள்பாடும் பொன்மேனி
பொறுமைக்கும் பேரரசன்
பழிக்குப் பழி வாங்கா பண்பாளன்
பாரிபுகழ் சொல்வேந்தர்
கல்வியில் கடல்
கருத்துரையில் எழுஞாயிறு
அடக்கத்திலே ஆமை
ஆண்மையிலே அரிமா
சிறைக்கஞ்சா பறவை
சீர்திருத்த செம்மல்
அறம்பாடும் பேரறிஞர்
அனைத்துலக வழிகாட்டி —

—''திருமலைக் கலைமாறன்''

★

தன்னுட்டைத் தன்னுடலாய்த்
தன்மொழியைத் தன்னுயிராய்த்
தன்னினத்தைத் தன்மூச்சாய்க்
கொண்ட அண்ணு — தன்னை
மறவாத நாளெல்லாம்
வண்டமிழ்ப்பற் றுள்ள
திறமான நாளெனவே
தேர்!

—வன்னியூர்க்கவிராயர்.

★

தாழ்வுற்ற தமிழ் தன்னை
வீறு கொண்டு எழவைத்தான்
தயங்கி நின்ற தமிழ்நாட்டை
பகுத்தறிவால் உயரவைத்தான்
இவ்வாறு பலவகையில்
தமிழன் வாழ்வை யுயர்த்தினின்ற
அண்ணு ஒருவனைப் பெற்றதாலே
உயர்ந்ததே தமிழ்நாடு!

—வண்ணையூர் கணேசமூர்த்தி.

★

தமிழ் எங்கள் மூச்சென்று
தரணியிலே கூறிய எம்
அண்ணுவின் வாய்மொழியை
வாழவைப்போம் வா தமிழா

-- மு. ஜெயசரஸ்வதி

★

அண்ணு வணக்கம்! அமரா வணக்கமெம்
கண்ணீர் சுரக்கும் கவிவணக்கம்! — அண்ணு நீ
மண்ணி லெமைப் பிரிந்த மாதம்பல
வாயினுமெம்
எண்ணமெலாம் நீயின்றி ஏது?

அண்ணு நீ விட்ட அடிச்சுவடு பின்பற்றிப்
பொன்னன நன்செய்
புவிக்களிப்போம் — சொன்னபடி
கள்ளிச்செடி போன்ற களைபல வேரறுக்க
உள்ளத்தில் கொண்டோம் உரம்.

— அனங்கன்.

★

மூக்கில் பொடியைப் போட்டுக்கொண்டு
மூக்கால் தமிழைப் பேசும் அண்ணு
தாக்கித் தம்மைப் பேசிவிட்டாலும்
தயங்காதவரை ஏசிட வந்து
வாக்கில் கடுமை ஏற்ற மறந்து
வணங்கிப் போற்ற வைத்திடுமன்ருே

—சௌமினி

★

தமிழ் நாடு ஒன்றை அமைத்தவன்
தமிழரை விழிப்புறச் செய்தவன்
தன்னலம் அற்ற அண்ணணே!
தந்துவிட்டாயே உன்னையே

—தொம்சன் காசிநாதர்.

★

| | | | |
|---|---|---|---|
| வான | மகன் | கண் | ணீரை |
| வைய | மதில் | மழை | யாக(ப்) |
| பூமக | ளின் | கால | டியில் |
| பொழி | கின்ருள் | ஆரு | இத் |
| தேன | முதத் | தமிழ | ணங்கு |
| தென் | னவனை | தானி | ழந்து |
| ஆன | துயர் | கொண் | டிங்கு |
| அலறு | கிருள் | அண்ணு | நீ |
| போன | வழி | நாம் | அறியோம் |
| பொறுக் | குமோ | நெஞ்ச | மது? |

— பாண்டித்துமிலன்.

★

வீரமிருக்கு மண்ணன் தமிழினிலே — உயர்
வெற்றி யிருக்குமவர் செயலினிலே
காரமிருக்குமவர் நடையினிலே — வண்ணக்
கனத்தை யடைந்தன ளெம்தமிழ்மகளே

— கதிர் ஆறுமுகன்.

தமிழகம் என்ருேர் நாட்டினை நிறுவி
எங்கும் எவையும் எதிலும் தமிழே
பொங்கு தேர்போல் பூத்துக் குலுங்க
நன்றே செய்தாய் தானிலம் வாழ்த்த
பகுத்தறி வில்லாப் பதர்களின் செய்கை
புராணமதங்கள் பொய் எனக் கூறி
சமர் பல பேசி சமதர்மம் காட்டி
நிலை குலையாத பகுத்தறி வூட்டி
விலை மதிப்பில்லாப் பண்டையோர் நாம்
மாற்ருன் தவறினை மறப்போம் மன்னிப்போம்
என்றே சொல்லி எமை மகிழ்வித்தாய்
இனிஎமை என்ன யாருளரிங்கென்று
தளபதி அண்ணு உந்தனை நம்பி
ஐந்தரைக் கோடி அகிலத் தமிழரும்
அலமர்ந்திருக்கையில் எங்கு நீ சென்ருய்
இன்னெரு பிறவி எடுத்து நீ வருவாய்
இன் தமிழ்ச் சொல்லால் எமதுயர் துடைப்பாய்

— வளலாயூர் செ. விந்தன்

★

பொன்னியை மணந்த சோழன்
பொருப்பினைக் கொண்ட சேரன்
கன்னியைக் கலந்த தென்னன்
காஞ்சியைச் சேர்ந்த மன்னன்
அன்னையாம் தமிழர் நாட்டை
அழகுடன் மீண்டும் ஆள
'அண்ணு' எனும் உருவினிலே
அவதாரம் செய்தாரம்மா!

சொந்த மொழிப் பற்றின்றி
சுதந்திர உணர்வும் இன்றி
வந்த மொழி பேசிப் பேசி
வாயெல்லாம் இனிக்கிதென்ற
சந்ததி வாழ்ந்த நாட்டில்
தமிழன்னை துயரம் கொண்டு
இந்திய கண்ணீர் போக்க
தோன்றினன் எங்கள் அண்ணு

அயலவர் ஆண்ட காலம்
அருந்தமிழ்க் கலைகள் எல்லாம்
புயலிலே வீழ்ந்து போன
பூங்கொடிபோல, மக்கள்
தயவின்றிக்கிடந்த வேளை
தமிழ் மகன், கலைஞர் அண்ணு
கயத்தினில் மலர்ந்த பூவாய்
காஞ்சியில் மலர்ந்ததம்மா

— எஸ். அரியரெத்தினம்

★

தேரோடுந் தமிழின்று
வேரோடு விழக்கண்டு
போராட வந்த வீரன்
— புகழ்த்
தாரோடு பாராண்ட
தமிழ் வேந்தர் அரசாட்சி
தனை மீண்டுந் தந்த தீரன்

இயலோடு இசைகண்டு
இந்நாடகமுங் கொண்டு
எந்தமிழ் காத்தமுதல்வன்
— அறத்
தியலோடு அரசாண்டு
பணிநீளத் தப்பியரை ஆக்கிய
தமிழ்ப் புதல்வன்

வரலாறு காணுத
வரலாற்றில் நிற்கும்
அண்ணன் — மக்கட்
திரளாறு களிகொள்ளச்
செந்தமிழ் புகழ்சாற்றும்
தமிழகம் தந்த திண்ணன்

வாளோடு வழிவந்த
வண்ணத் திராவிடர்
வளமேற்ற வந்த கோமான்
ஏழைத்
தோளோடு தோள் தந்து
தமிழ்மானம் காத்திட்ட
தன்மானத் தமிழ வீரன்!

—காரெழிலன்

★

நாட்டிலே பேதங்கள் ஞாயமோ என்றவர்
விஞ்சி எழுந்து நின்ருர் — அதை
நஞ்சாய் விரட்டி வென்ருர் — வழி
காட்டியே சீரினைச் செம்மையாய்ச் செய்தவர்
காவலனுகி நின்ருர் — தமிழ்
ஆவலைத் தூண்டிநின்ருர்

ஏழை பணக்காரர் என்றிருந்த வேதனை
எப்போ தொழியு மென்ருே — இங்கு
அப்போ விடியு மென்ருர் — அந்த
நாளை எதிர்பார்த்து நானிலம் செல்லுதல்
நாளும் நமக்கது நன்மை — அது
வாழும் எனச்சொல்லல் உண்மை

இங்ஙனம் சொல்லியே எமக்கறி வித்தவர்
எவரென் றெண்ணுகின்றீர் — தமிழ்
அவ'ரண்ணு' எனறறிவீர் — நாமு
அங்ஙனமாய் அவர் அளித்த வழியினில்
அன்புடனே செல்வோம் — அதனுல்
இன்பமுடன் வாழுவோம்.

— பாண்டியூர் தெட்சணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாநில சுயாட்சி என்பது திராவிட நாடல்ல!

## இந்திய ஒருமைப்பாடு நிலைக்கவே அதிகாரப் பிரிவினை கோருகிறோம்"

## தஞ்சையில் கருணாநிதி தெளிவுரை!

கழகப் பொதுக் குழு—செயற்குழு கூடுகிறது என்று நானே பொதுக்குழுக் கூட்டத்தில் அறிவித்ததைப் போல தஞ்சையிலே நடைபெறுகின்ற செயற்குழு—பொதுக்குழுவில் திராவிட முன்னேற்றக் கழகம் உடைந்துவிடும்—திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒரு பெரிய பிளவு ஏற்பட்டிருக்கிறது, ஆகவே இந்தப் பொதுக்குழு இந்தியாவில் இருக்கின்ற எல்லாக் கட்சிக்காரர்களாலும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒரு பொதுக்குழுவாகும். ஏனென்றால் இங்கேதான் தி. மு. கழகம் உடையப் போகிறது என்றெல்லாம் பலபேர் எதிர்பார்த்தார்கள்; நாவிலே நீர் ஊற ஊற அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தஞ்சையிலே நடைபெறுகிற பொதுக் குழுக் கூட்டத்திலே மாத்திரமல்ல; எங்கெங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக்குழு கூடுகிறது என்றாலும் ஒரு நான்கு நாட்களுக்கு முன்பு நாட்டிலே இருக்கின்ற ஏடுகளெல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு "பொதுக்குழு கூடுகிறது. கருணாநிதிக்கும் நெடுஞ்செழியனுக்கும் தகராறு—கருணாநிதிக்கும் அன்பழகனுக்கும் தகராறு—கழகம் இரண்டாக உடையப்போகிறது—நாலாக உடையப்போகிறது" என்றெல்லாம் செய்திகளைப் போடுவார்கள்.

### புதிய தெம்பு

அந்தச் செய்திகளைப்பார்த்ததும் உள்ளபடியே எங்களுக்கு மகிழ்ச்சி பொங்கும்; புதிய தெம்பு ஏற்படும். இதுதான் நல்லது என்று எண்ணத்தோன்றும்; ஏனென்றால் ஒருவேளை நமது கழகத் தோழர்களிடத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறிது மனக்கசப்பு இருந்தாலும் அவர்களெல்லாம் எச்சரிக்கையோடு—ஆக இங்கே உடையப் போகிறது என்று சொல்கிறார்களே நாமெல்லாம் உடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அத்தனை பேரும் அந்தப் பொதுக் குழுவுக்கு வந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்கனவே இருந்த வலிவை விட இன்னும் ஒரு பங்கு அதிகமான வலிவைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்களே அல்லாமல் யார் யார் வயிறு எரிகிறார்களோ—யார் யார் எரிச்சலைக் கொட்டுகிறார்களோ—யார் யார் ஜாதகம் கணிக்கிறார்களோ—யார் யார் ஆருடம் பார்க்கிறார்களோ அவர்களெல்லாம் ஏமாந்து போகின்ற சரித்திரங்களைத்தான் நமது கழக மாவீரர்கள் எழுதிக் காட்டியிருக்கிறார்களேயல்லாமல் யாரும் தாண்டி விடுவோருக்கு—தாளம் போடுவோருக்கு சிண்டு முடிவோருக்கு—சகுனி வேலை பார்ப்போருக்கு என்றைக்கும் சரணடைந்ததாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு இல்லை. இனியும் இருக்கப்போவதில்லை என்பதைத்தான் இன்றும் நேற்றும் நடந்து முடிந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு—பொதுக்குழு முடிவுகள் நாட்டுக்கு முரசறைந்து கொண்டிருக்கின்றன;

### பத்திரிகைகள் சின்னத்தனம்

இன்றைக்கு காலையிலே ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். திராவிடமுன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழு ரகசியமாக நடைபெற்றது. இது தலைப்பு. பிறகென்ன தஞ்சை மணிக் கூண்டுக்கு அருகாமையில் நடுத்தெருவிலா நடைபெறும்? செயற்குழு என்றாலே ரகசியமாகத்தான் நடைபெறும். செயற்குழு ரகசியமாக நடைபெற்றது — இது ஒரு பெரிய தலைப்பு. அது மாத்திரமல்ல செயற்குழு பொதுக்குழு நடைபெறும் இடங்களில் போலீஸ் பாதுகாப்பு போடப் பட்டிருந்தது என்று வேறு எழுதுகிறார்கள். இங்கிருக்கின்ற நிருபர்களுக்கு இதைத்தான் எழுதி அனுப்ப வேண்டும் என்று கட்டளை பிறந்ததா? ஆசை தோன்றியதா? எனக்குத் தெரியவில்லை.

பலத்த போலீஸ் பாதுகாப்புபோடப்பட்டிருந்தது. அதாவது பொதுக்குழுவிலே அவ்வளவு பெரிய சண்டை வருமாம்; இரு தரப்பாரும் வியூகங்கள் வகுத்துக்கொள்வார்களாம்— அக்ரோணிக் கணக்கிலே வீரர்கள் நின்று பாரதப் போரிலே பாண்டவர்கள் ஒரு பக்கம் கௌரவர்கள் ஒரு பக்கம் நின்று கணைகளைப் பொழிந்து கொண்டார்களே அதைப் போல தஞ்சை சங்கீத மகாலில் கணைகள் பொழியப் படும் என்று கருதினார்கள். அது கர்ணன் படம் எடுத்த போது வேண்டுமானால் அந்தக் கணைகள் அங்கு பொழியப்பட்டிருக்குமே தவிர கழகத்தின் பொதுக்குழு செயற்குழு நடைபெறுகிற நேரத்திலே கணையும் பொழியவில்லை—கலகமும் நடைபெறவில்லை, அமளியும் இல்லை—ஆசாபாசங்கள் எதற்கும் ஆட்படுகின்றவர்கள் யாருமில்லாத காரணத்தினால் இலட்சியம் ஒன்றினையே குறிக்கோளாகக்கொண்டு எங்கள் அண்ணன் தலைமையிலே ஒன்றுபட்டு நிற்போம் நாங்கள்— என்கின்ற அளவுக்குத்தான் திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு—பொதுக்குழுவில் கலந்து கொண்ட கழகத்தின் செயல் வீரர்கள் பொறுப்புமிகுந்தவர்கள் மாவட்டச் செயலாளர்கள்— கழகத்தின் செயல் வீரர்கள் அத்தனை பேரும் தங்களது கடமையினை செய்து முடித்திருக்கிறார்கள்.

### மாநில சுயாட்சி

இந்தப் பொதுக்குழுவிலே நாம் கோடிட்டுக் காட்டியிருக்கின்ற மிக முக்கியமான கொள்கை மாநில சுயாட்சி என்பதாகும். மாநில சுயாட்சி திராவிட முன்னேற்றக் கழகம் நேற்றோ இன்றோ புதிதாக வெளியிட்டிருக்கின்ற பிரகடனம் அல்ல; நமது தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவதற்குமுன்பு பொங்கல் மலரில் தம்பிக்கு எழுதிய மடலில் அவர்கள் குறிப்பிட்டார்கள்; "தம்பி நான் முதலமைச்சராக இருக்கிறேன். ஆனால் என் கைகள் கட்டிப் போடப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ தமிழகத்திற்குச் செய்யவேண்டுமென்று தனியாய்த் தவிக்கிறேனடா தம்பி; ஆனால் அதிகாரமற்றவனாக இருக்கிறேன். நான் சிறைச்சாலைக் கைதிபோல இருக்கிறேன்; செய்யவேண்டிய காரியங்களைச் செய்ய முடியாமல் சூழ்நிலைக் கைதியாக ஆகியிருக்கின்றேன். ஆகவே நான் எண்ணியவைகளையெல்லாம் என் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டுமேயானால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும். ஆகவே நம்முடைய போராட்டம் நிற்கவில்லை.



அது தொடரும்'' என்கின்ற இந்த மணி வாசகங்களை மறைந்த நம்முடைய மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சாசனமாக எழுதி வைத்து விட்டுப் போனார்கள்;

அவருக்குச் சிலை வைப்பதால் மாத்திரம் நாம் அவருடைய கொள்கை வழியிலே நடந்துவிட்டதாகப் பொருளல்ல. அவருடைய படங்களைத் திறந்துவைப்பதால் மாத்திரம் நம்மை ஆளாக்கிய அண்ணனுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துமுடித்துவிட்டோம் என்பது பொருளல்ல.

நாம் அவருடைய கொள்கைகளுக்கு வெற்றிதேடித் தந்தோம். அவர் எழுதிய சாசனத்தை நாம் உருவாக்கினோம் என்பதற்காகத்தான் மாநில சுயாட்சிக் கொள்கையை இன்றைக்கு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற அந்த அக்கறையோடு செயற்குழு பொதுக்குழுவிலே தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்;

### இராசமன்னார் அறிக்கை

அவைகளைப் பற்றி நல்ல விளக்கங்களை கேட்பவர்களுக்கும்— விவரங்களை அறியத்துடிப்பவர்கட்கும்—எந்த மத்திய அரசோடு இதைப் பற்றிப்பேச வேண்டுமோ அந்த மத்திய அரசுக்கு இதைப் பற்றி அளிப்பதற்காகத்தான் இந்தியாவிலே எந்த மாநிலங்களும் முன்வராத நேரத்தில் தமிழ் மாநிலம் அதற்காக முன் வந்து தமிழக அரசு இராசமன்னார் குழுவை உருவாக்கி மத்திய — மாநில உறவுகளை ஆராய்ந்து எந்தெந்த அதிகாரங்களை மாநிலங்கள் பெறவேண்டும் என்பனவற்றையெல்லாம் கட்டிக் காட்டி பரிந்துரை செய்யுங்கள். அவைகளை நாங்கள் ஆராய்ந்து முழுமையான முடிவிற்கு வருகிறோம் என்று அறிவித்ததற்கிணங்க அந்தக் குழு காரியமாற்றி அறிக்கை தந்து திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியின் சார்பிலே தனிக்குழுவை அமைத்து அந்தக் குழு அது பற்றி ஆராய்ச்சி நடத்தி விரைவிலே அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறது—

அந்த அறிக்கையைப் பொதுக்குழுவும்—செயற்குழுவும் மீண்டும் ஓர் ஆய்வு செய்து எடுக்க வேண்டிய முடிவுகளை எடுத்து மத்திய அரசோடு உட்கார்ந்து பேசி என்னென்ன அதிகாரங்கள் மாநிலத்திற்குத் தேவை — இன்னும் இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்ய அதிக அதிகாரப் பளுவை மத்திய அரசு சுமந்து கொண்டிருக்கிற காரணத்தினால் வெகு தொலைவிலே இருந்து மாநில விவகாரங்களை அவர்களால் கவனிக்க முடியவில்லை; அதுவே அதிகாரப் பரவல் முறை வேண்டும். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற அளவில் நாம் மாநில சுயாட்சி கேட்கிறோம்.

இந்திய ஒருமைப்பாடு முதலில்—மாநில சுயாட்சி இரண்டாவது என்ற அந்த வரிசையிலேதான் நாம் கேட்கிறோம். மாநில சுயாட்சி இந்திய ஒருமைப்பாடு கெட்டாலும் பரவாயில்லை என்கின்ற அந்த அடிப்படையில் கேட்கப்படுவதல்ல; இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு தேடாத வகையில்—இந்திய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையிலேதான் மாநில சுயாட்சி கேட்கிறோம்.

### பிரிவினையா?

"மாநில சுயாட்சி வேண்டும் இந்திய ஒருமைப்பாடு தேவையில்லை என்று சொன்னால் அவன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பகைவனே தவிர, நண்பன் அல்ல; ஆனால் இன்றைக்குச் சில பேர் மாநில சுயாட்சியை திராவிடமுன்னேற்றக்கழகம் கேட்பதா? திராவிட முன்னேற்றக்கழகம் மாநில சுயாட்சிக் கொள்கையை எழுப்பினால் மேலும் அது வளரும்; அதன் கொள்கைகள் மக்கள் மனதிலே தங்கும். திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்ற இடத்தை நாம் காலாகாலத்திற்கும் பிடிக்க முடியாது என்ற எண்ணம் கொண்டோர் சிலர் இது பிரிவினை வாதம் என்கிறார்கள்;

திராவிடநாடு பிரிவினையை அண்ணா அவர்கள் விட்டு விட்டேன் என்று அன்றைக்கே அறிவித்து விட்டுச் சென்றார்கள்; நாம் அந்தப் பிரிவினை வாதத்தில் இன்று புக விரும்பவும் இல்லை. நினைக்கவும் இல்லை; ஆனால் சிலர் பேசுகிறார்கள்; மாநில சுயாட்சி என்பது பிரிவினை வாதம் என்று!

மரக்கிளைகளில் நம்முடைய நண்பர்கள் ஒளியுமிழ்கின்ற விளக்குகளையெல்லாம் இங்கே தொங்கவிட்டிருக்கிறார்கள். ஆனா... மரங்களில் எவ்வளவு ஒளியுமிழ் கனிகள் காய்த்துத் தொங்குவது போலக் காட்சியளிக்கிறது என்று சொன்னால் அப்படிச் சொல்கிறவன் கற்பனையாளன். ஆமாம் அவை காய்கனிகளே தான். ஒருவன் உறுதியாகச் சொன்னால் அவன் எத்தன்; காய்களே தான் — கனிகளே தான்; அவற்றை நான் பறித்து வருகிறேன் என்று ஏறிப் பறித்தால் அவன் ஏமாளி.

மாநில சுயாட்சி என்று சொல்கிறோம். அது பிரிவினை வாதம் என்று சிலர் சொல்கிறார்கள். அப்படிசெய்வதோடு நின்றால் அவர்கள் கற்பனையாளர்கள்; இது பிரிவினை வாதம்தான் என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னால் மரத்திலே தொங்குவது விளக்குகளல்ல; காய்கனிகள் தான் என்று சொல்லுகின்ற பட்டியலில் அவர்கள் சேருகிறார்கள். ஆமாம் கழகம் சொல்வது தவறு இவர்கள் சொல்வதுதான் சரி; நான் ஏறிப் பார்க்கிறேன் என்று பறிக்கப் போனால் அந்த ஏமாளிப் பட்டியலில் அவன் வருகின்றான்.

### காய் கனிகள்

திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு எடுத்துச் சொல்கின்ற இந்தக் கொள்கை மாநிலசுயாட்சிக் கொள்கை பிரிவினை வாதம் என்று பேசப்படுகிறது. பிரிவினை வாதம் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லப்படுகிறது. இது பிரிவினைவாதம்; ஆகவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்ப்போம் என்று சிலபேர் ஆர்ப்பரிக்கிறார்கள். இவை, காய் கனிகள்தான்; அவைகளை நாங்கள் பறிப்போம் என்று சென்று பல்பிலே கைவைத்து 'சாக்' அடித்துக் கீழே விழுந்தவனுக்கும்—இது பிரிவினைக் கட்சிதான் ஆகவே அதை அழிப்போம் என்று சொல்லி அதில் கை வைப்பவனுக்கும் வித்தியாசம் எதுவும் இருக்க முடியாது;

இதைத்தான் அந்த நண்பர்களுக்கெல்லாம் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்; திராவிட நாடு பிரிவினையல்ல; மாநில சுயாட்சி என்பது.

முஜிபுர் ரகுமானைக்காட்டுகிறாயே; முஜிபுர் ரகுமானைப் பற்றிச் சொல்கிறாயே வங்க தேசம் விடுதலையானதை இதோடு ஒப்பிடுகிறாயே என்றெல்லாம் கேட்கிறார்கள். ஒப்பிடவில்லை. வங்க தேச விடுதலையைப் போல் தமிழ் நாட்டுக்கு விடுதலை வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கவில்லை; திட்டவட்டமாகச் சொல்கிறோம். அப்படிக்கேட்கவில்லை. வங்கதேச விடுதலை ஏன் வந்தது என்ற கதையைச்சொல்கிறோம். அவ்வளவுதான்;

### வங்கம்

வங்க தேசத்தில்—முன்னாள் கிழக்குப் பாகிஸ்தானத்தின் முஜிபுர் ரகுமான் எனக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்டார். ஆறம்சத் திட்டத்தை வைத்துக்கேட்டார். அவர் கேட்ட ஆறம்சத் திட்டத்திற்கும் நாம் கேட்கும் மாநில சுயாட்சித் திட்டங்கட்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. அவர் கேட்ட மாநில சுயாட்சியைக் கொடுக்க யாகியாகான் மறுத்தார். யாகியாகான் மறுத்த பிறகு அங்கே போர்க்குரல் கிளம்பிற்று முக்தி வாகினிப்படை

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தலையங்கம் தணிக்கை!

புதிய அரசியலமைப்புத் திட்டத்தினால் தமிழினத்துக்கு ஏற்படவிருக்கும் சாதகபாதகங்களை ஆராய்ந்திடும் நோக்குடன் சனவரி 29, 30ம் திகதிகளில் யாழ்நகரில் கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாடு, இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் எண்ணங்களையும், அபிலாஷைகளையும் இந்நாட்டு அரசுக்கும் உலகுக்கும் திட்டவட்டமாகப் பிரதிபலித்திருக்கிறது.

உணர்ச்சியும், உத்வேகமும் கரைபுரண்டோட, மன்னார் மலையகம், மட்டுநகர், திருகோணமலை, வவுனியா, கொழும்பு போன்ற பல்வேறு இடங்களிலுமிருந்து வந்திருந்த தமிழ் பேசும் மக்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இச் சிறப்பு மாநாட்டில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை ஆணித்தரமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

**தமிழ்த் தேசிய இனம் இந்நாட்டில் ஒரு போதுமே அடிமைத்தனத்தை ஏற்காது — சரணாகதியடையாது என்பதையும், தனது விடுதலைக்கும் இனமொழி, உரிமைகளுக்கும் இறுதிவரை போராடியே தீரும் என்பதையும் இம்மாநாடு அழுத்தம்திருத்தமாக அறிவித்துவிட்டிருக்கிறது.**

தமிழரசுக்கட்சியின் இச்சிறப்பு மாநாடு, பதினொரு தெளிவான, திட்டவட்டமான காரணங்களைச் சுட்டிக் காட்டி, தமிழினத்துக்கு சவக்குழிதோண்டும் புதிய அரசியலமைப்பை முற்று முழுதாக நிராகரித்திருக்கிறது.

தமிழினத்தின் சார்பில் நான்கு கோரிக்கைகளையும் இம்மாநாடு பகிரங்கமாக பிரகடனப்படுத்தியிருக்கிறது. நாடு பிளவுபட்டு விடக் கூடாதென்பதிலும், இலங்கையின் ஒருமைப்பாடு நிலைக்க வேண்டுமென்பதிலும் உண்மையான — அந்தரங்க சுத்தியான — அக்கறையுடையவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தமிழரசு மாநாடு நிறைவேற்றிய இந்த நான்கு அம்சக்கோரிக்கையை அலட்சியம் செய்துவிட முடியாது.

(1) சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் சட்டபூர்வமாக அளிக்கப்படவேண்டும்.

(2) இந்நாட்டு அரசு மதச்சார்பற்றதொன்றெனதாக பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

(3) இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் எல்லோரதும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

(4) தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் தமிழ் தேசிய இனத்தின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

இவைதாம் தமிழரசு சிறப்பு மாநாடு நிறைவேற்றியுள்ள தமிழ் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட, நியாயமான கோரிக்கைகளாகும். இந்தக் கடைசித்தருணத்திலும், இலங்கை ஒரேநாடாக விளங்க வேண்டுமென்ற ஆவலுடனேயே இக்கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது நமது கடமையாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் மிகப் பெரிய கட்சி. தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக இருப்போரில் மூன்றில் இரு பகுதியினர் இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். 1956ம் ஆண்டு முதல் இந்நாட்டுத் தமிழ் தேசிய இனம் தனக்காகப் பேசும் உரிமையை — வாதாடும் போராடும் உரிமையை — தமிழரசுக்கட்சியிடமே கையளித்து தனது பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக தமிழரசுக் கட்சியை ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் இந்நாட்டுப் பெரும்பான்மைத் தமிழினத்தின் இதய ஒலியாகுமென்பதை — சனநாயகத்துக்கு மதிப்புக்கொடுத்திட மறுப்போரைத் தவிர — ஏனையோர் அனைவருமே ஏற்றுக்கொள்வர்.

## தணிக்கை

## 'பிரிவினைப் பாதையில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

2. சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மை சமுதாயங்களுக்கு பாரபட்சமான சட்டங்கள் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட 29வது விதி முற்றாக நீக்கப்பட்டு, சாதாரண பெரும்பான்மை வாக்கினால் எச்சட்டத்தையும் ஆக்கிச், சிறுபான்மைச் சமுதாயங்களை நிர்மூலமாக்க வழிவகுக்கப்பட்டிருக்கிறது.

### தனிச் சிங்களம்

3. தமிழ் மக்களால் 1956ம் ஆண்டு தொடக்கம் ஏகோபித்து நிராகரிக்கப்பட்ட தனிச்சிங்களச் சட்டம் அரசியல் சட்ட அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு வருங்காலத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்துவது மிகக் கடினமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது.

4. தமிழ்மொழிக்கு சட்டபூர்வமான எவ்வித அந்தஸ்தும் அளிக்காது விரும்பினால் சட்டவிதிகளை நிறைவேற்றவோ அன்றேல் உதாசீனம் செய்யவோ கூடிய 1958ம் ஆண்டு தமிழ்மொழி உபயோகச் சட்டத்தை மாத்திரம் குறிப்பிடுவதுமூலம் தமிழினத்தினதும் தமிழ் இனத்தினதும் சிறுமைக்கு இவ்வரசியல் திட்டத்தில் முத்திரையிடப்பட்டிருக்கிறது.

### நீதிமொழி

5. நாடு முழுவதும் சிங்களமே நீதி நிர்வாக, பதிவு மொழியாக நிலைநாட்டப்படுக்கப்பட்டிருக்கும் நேரத்தில் வடக்கிழக்கு மாகாணத்தில் தானும் தமிழ் நீதி நிர்வாக, பதிவு மொழியாக ஏற்றுக்கொள்ளப்படாது வருங்காலத் தேசிய சபை விரும்பினால் இவ்விரு மாகாணங்களிலும் வேறு ஒழுங்கு செய்யலாம் என்று விதித்திருப்பதன் மூலம் அரசியல் சட்டத்தில் தமிழுக்கு ஒரு சிறிதும் இடம் அளிக்கக்கூடாது என்ற ஆட்சியாளரின் கொள்கை உறுதிப்படுத்தப் பெற்றிருக்கிறது.

### மதம்

6. பௌத்த மதத்திற்கு அரசியல் சட்டமூலம் தனி அந்தஸ்து அளித்து ஏனைய மதங்களும் அவற்றை அனுஷ்டிப்போரும் இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளென்பது நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

### குடியுரிமை

7. இந்நாட்டுத் தமிழ் மக்களில் ஒரு சாராரை நாடற்றவர்களாகவும், ஏனையோரை சந்தேகப் பிரஜைகளாகவும் ஆக்கியிருக்கும் குடியுரிமைச் சட்டங்களுக்குப் பதிலாக அரசியல் சட்டத்தில் குடியுரிமை பற்றிய யோக்கிய தாம்சங்கள் வரையறுக்கப்படவேண்டுமென்ற தமிழினத்தின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு தமிழ் மக்கள் இன்றைய அநீதியான குடியுரிமைச் சட்டங்களின்கீழ் தொடர்ந்தும் இடர்ப்படும் நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

8. புதிய அரசியல் சட்டத்தின் 18வது விதியின் 1ம் பகுதியால் அளிக்கப்படும் முழுமையற்ற அடிப்படை உரிமைகள் தானும் அதே விதியின் 2ம் பகுதியினால் பறிக்கப்பட்டிருக்கின்றன.

9. இந்நாட்டில் சாதியை அழித்து சாதியின் பேரால் இழைக்கப்படும் அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தக்க எவ்வித பாதுகாப்பும் இவ்வரசியல் திட்டத்தில் இடம்பெறவில்லை.

10. தமிழ் மக்கள் அரசாங்க நிறுவனங்களோடும், [illegible] முதல் தொடர்புகொண்டு, தமிழில் பதில்பெற்றுத், தமிழில் கருமமாற்றித், தமிழில் நீதி பெறும் மறுக்கமுடியாத மனித உரிமைதானும் இவ்வரசியல் திட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### இனக்கொலை

11. இந்நாட்டில் தனியரசு செலுத்தியதமிழ்இனம் எவ்வித அரசியல், மொழி, மத, பொருளாதார உரிமைகளும் அற்றவர்களாக ஆக்கப்பட்டு அவர்களுடைய இன, கலாச்சார தனித்துவத்தை அழித்து, பொருளாதார வாழ்வைப் பறித்து மெல்ல மெல்ல இனக்கொலைக்கு இவ்வரசியல் திட்டம் வழி வகுக்கிறது.

எனவே,

இலங்கைத் தமிழ் தேசிய இனம் இவ் அடிமைச் சாசனத்தைப் பூரணமாக நிராகரிக்கின்றது என்பதை இம்மாநாடு பிரகடனஞ் செய்யும் அதே நேரத்தில்,

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் இருப்போர் எவரும் இதற்குச் சாதகமாக வாக்களிக்கக் கூடாதென்று

## (தணிக்கை)

இம்மாநாடு தன்மானத் தமிழ் மக்களைக் கோருகின்றது.

### கோரிக்கைகள்

மேலும்,

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டு தமிழ் இனம் அரசாங்கத்தினால் பிரிவினைப்பாதையில் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில்,

(அ) சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் சட்டபூர்வமாக அளிக்கப்பட வேண்டுமென்றும்,

(ஆ) இந்நாட்டு அரசாங்கம் மதச்சார்பற்றதாகப் பிரகடனஞ் செய்யப்பட வேண்டுமென்றும்,

(இ) இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் எல்லோராலும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டுமென்றும்,

(ஈ) தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் தமிழ்த்தேசிய இனத்தின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இம்மாநாடு கோருகின்றது.

### உடமைகளை மீட்பீர்

இழந்துவிட்ட இவ்வுரிமைகளை மீண்டும் பெறுவதற்கு எவ்வித தியாகத்திற்கும் தயாராக நடவடிக்கை எடுக்குமாறும், தென்னிலங்கையின் ஆட்சியாளரின் செயலினால் தம் தொழில் கல்வி வசதிகளை இழந்து வரும் தமிழ் மக்கள் தம் உடைமைகளையெல்லாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாற்றி தமக்கும் தமிழ் இனத்திற்கும் தம் சொந்தத் தாயகத்தில் வளமான வாழ்வை அமைக்க உடன் ஆரம்பிக்குமாறும் இம்மாநாடு வேண்டுகின்றது.

## அடுத்தவாரம்

- மாநாடு பற்றி சூடான அரசியல் மடல்
- அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்-தொடர் கட்டுரை.
- குடுக்தியார்.

ஆகிய அம்சங்கள் இடம் பெறும். இவ்வாரம் இடமின்மையால் இடம்பெறவில்லை.

## முற்போக்கு திருடரின் முகமூடி கிழிகிறது!

முற்போக்கு எழுத்தாளர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்வோர் எதிலே முன்னேறிவிட்டார்கள் என்று கேட்டால் 'இலக்கியத் திருட்டில்' என்று உடனே பதில் சொல்லிவிடலாம்.

ராஜாஜியின் 'பாதுகை' கதையின் கருவைத் திருடி கதை எழுதிய மல்லிகைக்காரர்களை இலக்கிய இரசிகர்கள் நன்கு அடையாளம் கண்டு வைத்திருக்கிறார்கள்—

கதை திருடுவது மட்டுமல்ல —மற்றைய கலைகளைத் திருடுவதும் முற்போக்கு முண்டங்களின் வேலை என்பதை இதோ நாம் இன்று அம்பலமாக்குகிறோம்—

மல்லிகையென்பது கம்யூனிஸ்ட் கட்சிக்காரரான டொமினிக் ஜீவா என்பவர் நடத்தும் ஒரு பத்திரிகை; இந்தப் பிரகஸ்பதி தான் தமிழ்நாட்டுப் பத்திரிகை இறக்குமதி தடைசெய்யப்படவேண்டுமென்று ஒரு பக்கம் கூச்சலிட்டுக்கொண்டு மறுபக்கம், தமிழ் நாட்டிலேயே தனது புத்தகங்களை அச்சிடுவிப்பவர். இங்கு ஏதோ தன்னிடம் 'தனித்துவம்' இருப்பதாக கூச்சலிட்டு வருபவர். இவர் நடத்தும் பத்திரிகைக்கு கம்யூனிஸ்ட் கட்சியும் மாதா மாதம் ரூபா 300/ 'அளந்து' வருகிறதாகவும் கேள்வி.

ஆனால் இவரது 'மல்லிகை' 1972 சனவரி இதழின் அட்டைப் படத்தைப் பாருங்கள். முக்கோணங்களினால் ஆக்கப்பட்ட இந்த அட்டைப்படம் ஈழத்தின் பிரபல ஓவியர் 'வசந்தன்' அவர்களின் படைப்பு என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது முற்றுமுழுதான ஒரு திருட்டாகும்!

இதே முக்கோண ஓவியம் 1970ம் ஆண்டு வெளிவந்த பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலையினால் வெளியிடப்பட்ட 'கலாவதி' எனும் சஞ்சிகையில் ஓவியர் க. கனகசபாபதி அவர்களினால் தீட்டப்பட்டிருக்கிறது. 'காதலர்கள்' என்று அதற்கு தலைப்பும் தரப்பட்டிருக்கிறது.

திரு. கனகசபாபதியின் ஓவியத்தை திருடி மல்லிகையில் போடுவது தான் முற்போக்கா? யார் இந்த ஓவியத் திருடர் 'விசாகன்'? மல்லிகையார் கூறுவாரா? 'பாதுகை' திருட்டு மேலும் தொடர்கிறதா?

திரு. கனகசபாபதி மல்லிகை ஆசிரியர் மீது சட்ட நடவடிக்கை யெடுக்கவிருப்பதாகவும் அறிகிறோம்.

## ஆட்சிக்கு இறுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரத் தமிழரசைக் கோரும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவார்கள் என்பதை ஆட்சியாளர்களுக்கு உறுதியாகக் கூற விரும்புகின்றேன். மனிதர்களாக வாழ விரும்பும் இனத்திற்கு வேறு மார்க்கமில்லை."

—இவ்வாறு யாழ். மாநகர சபை மண்டபத்தில் 30—1—72ல் நடைபெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாட்டில் தலைமைப் பேருரை நிகழ்த்திய திரு: சி. மு. இராசமாணிக்கம் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு மாநாட்டில் இராசமாணிக்கம் நிகழ்த்திய தலைமையுரை!

வரவேற்புக்குழு தலைவர் அவர்களே,
மாநாட்டுப் பிரதிநிதிகளே,
சகோதர சகோதரிகளே,

இந்நாட்டை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி ஒரு புதிய அரசியல் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் உங்களை ஓர் சிறப்பு மாநாட்டிற்கு அழைத்திருக்கின்றோம். ஏனைய மாநில மாநாடுகளைப் போலன்றி இச்சிறப்பு மாநாடு இப்புதிய அரசியலமைப்பையும் அதன்கீழ் தமிழ் மக்களுடைய நிலையையும் ஆராய்ந்து தமிழினம் தன்மானத்தோடு வாழ்வதற்கு ஓர் வழியைக் காட்டுமாறு அழைக்கப்பட்டிருக்கிறது.

1961ம் ஆண்டில் இதே மண்டபத்தில் எமது கட்சியின் 7வது மாநில மகாநாட்டிற்கு தலைமை தாங்கும் பேறு எனக்குக் கிடைத்திருந்தது. தனிச்-சிங்களத் திணிப்பை எதிர்நோக்கியிருந்த தமிழினத்திற்கு சத்தியாக்கிரகப் போராட்டப் பாதையை அம்மகாநாடு காட்டியது. அம்மகாநாட்டைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களின் ஐந்து தலைநகரங்களிலும் நாம் ஆரம்பித்த அறப்போர் ஆட்சியாளரைத் திணறவைத்ததென்பது சரித்திரத்திலிடம் பெற்ற ஓர் சம்பவமாகும். அதன்பின்பு கடந்த 11 ஆண்டுகளாக எமது இயக்கம் பல்வேறு ஒத்துழைப்பு முறைகளையும் கையாண்டு நாம் இழந்த உரிமைகளைப் பெற முயன்றது. இன்று 1961இல் நாம் எதிர்நோக்கிய ஆபத்திலும் பார்க்க பலபடங்கு பாரதூரமான மாற்றங்கள் நம்மை எதிர்நோக்கியிருக்கும் கட்டத்தில் நாம் இங்கு கூடியிருக்கின்றோம். எனவே இச்சந்தர்ப்பத்தின் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு வரப்போகும் சந்ததிகளுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய ஓர் தீர்மானத்தை நீங்கள் எடுப்பீர்களென்று நம்புகிறேன்.

1947ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இன்றைய சோல்பரி ஒற்றையாட்சித் திட்டத்தை எமது கட்சியின் ஆரம்பத்திலிருந்தே நாம் நிராகரித்தோம். இவ்வரசியலமைப்பை மாற்றவேண்டுமென்ற ஒரே குறிக்கோளோடு எழுந்த இயக்கமே இலங்கைத் தமிழரசுக்கட்சி. எனவே இன்றைய அரசியலமைப்பு முடிவுக்குக் கொண்டுவரப்படுவது பற்றி நாம் சிறிதும் கவலைகொள்ளத் தேவை இல்லை.

1970ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் மக்கள் தமக்களித்த கட்டளைப் பிரகாரமே ஓர் சோசலிச குடியரசை அமைப்பதற்கு அரசியல் நிர்ணயசபையை அமைத்திருப்பதாக ஆட்சியாளர் கூறினர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமக்கு ஓர் அரசியல் திட்டத்தை ஆக்கும் அதிகாரத்தை அவர்கள் இவ்வரசாங்கத்திற்கு அளிக்கவில்லையென்பதை நான் திடமாக கூற விரும்புகின்றேன். கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தொகுதிகளில் ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் எவரும் வெற்றி பெறுதது மாத்திரமன்றி இரண்டொருவரைத் தவிர அவர்களெல்லோரும் தமது கட்டுப்பணத்தை இழக்கும் வகையில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டனர். எனவே சிங்கள மக்களினால் அளிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டே ஆட்சியாளர் புதிய அரசியலமைப்பைத் தயாரிக்க முற்பட்டனர் என்பது தெளிவாகின்றது.

இவ்வரசாங்கத்திற்கு ஒரேயொரு தேர்தலில் சிங்கள மக்கள் அளித்த அதிகாரத்திற்கு மாறாக 1956ம் ஆண்டு தொடக்கம் அடுத்து 5 பொதுத்தேர்தல்களில் இவ்வொற்றையாட்சி அமைப்பை மாற்றி ஓர் இணைப்பாட்சி அரசியலமைப்பை ஏற்படுத்துமாறு தமிழ் மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். இவ்வைந்து தேர்தல்களிலும் ஐக்கிய இலங்கை சமஷ்டியின் ஒரு அங்கமாக ஓர் சுயாட்சித் தமிழரசு நிறுவப்படவேண்டுமென்பதே தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பாகும். இவ்வைந்து தேர்தல்களிலும் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட தமிழ்த் தொகுதிகளில் இக்கோரிக்கையை முன்வைத்த தமிழரசுக் கட்சி வேட்பாளர்களே வெற்றிபெற்றனர். புதிய அரசியலமைப்பு இந்நாட்டு மக்கள் எல்லோருடைய அபிலாசையையும் பூர்த்திசெய்வதாயிருந்தால் 15 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் இடையறாது விடுத்துவரும் இக்கோரிக்கையை உள்ளடக்கியதாகவே இருக்கவேண்டும்.

சமஷ்டிக் கோரிக்கை உட்பட்ட அரசியலமைப்புப் பற்றிய எல்லாக் கருத்துக்களும் கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்படுமென்ற உறுதிமொழியின்பேரில் அரசியல் நிர்ணயசபையிற் கலந்துகொள்ளுமாறு பிரதமர் விடுத்த அழைப்பை ஏற்று எமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் நிர்ணயசபையின் ஆரம்பக் கூட்டங்களில் கலந்துகொண்டனர். இக்கட்டத்தில் அரசியல் நிர்ணய சபைக்கு நாம் சமர்ப்பித்த கோரிக்கையையும் அரசியல் திட்டத்தையும் சிறிது ஆராய்வது அவசியமாகின்றது.

ஐரோப்பியர் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்நாட்டு மண்ணில் காலடி வைத்தபோது தமிழ் மக்கள் தமக்கென ஒரு அரசு உடையோராய் உரிமையோடு வாழ்ந்தனர். போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் படை வலிமையால் தமிழ்ப் பிரதேசங்களை வெற்றிகொண்ட உரிமைபற்றியே எம்மை ஆண்டு வந்தனர். இலங்கையை ஒரு குடியரசாக்கி அந்நிய ஏகாதிபத்தியத்தின் இறுதிச் சின்னமும் அகற்றப்படுகின்ற இந்நேரத்தில் நாம் மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் போரிலே இழந்துவிட்ட இறைமைமிக்க சுதந்திரத்தை மீள அளிக்குமாறு கோருவதற்குத் தமிழ் மக்களுக்கு உரிமையுண்டு. பிரித்தானிய ஆட்சியாளர் நிர்வாக வசதிக்காக தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களை, சிங்கள இராட்சியங்களின் பிரதேசங்களோடு இணைத்துவிட்ட காரணத்தினால் தமிழ் இறைமையை அழித்துவிடமுடியாது.

(அடுத்த இதழில்முடியும்)

# இன எழுச்சியூட்டிய தமிழரசு சிறப்பு மாநாடு!

முத்தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றில் சனவரி 29ம், 30ம் நாட்கள் அதிமுக்கியத்துவம் பெற்று விட்டது. ஆம், இவ்விரு நாட்களிலும்தான், புதிய அரசியல் திட்டத்தை ஆராயும் தமிழரசுக்கட்சியின் சிறப்பு மாநாடு யாழ் நகரில் நடைபெறறது.

இச்சிறப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவென, வடக்கு, கிழக்கு மலைநாடு போன்ற சகலபகுதிகளிலுமிருந்து ஏராளமான பிரதிநிதிகளும், மற்றும் துடிப்புமிக்க தமிழ் மக்களும் யாழ் நகரை முற்றுகையிட்டிருந்தனர். அனைவரிடமும் சூடான அரசியல் வாதப் பிரதிவாதங்களும், கொந்தளிக்கும் விடுதலை உணர்வும், பிரிட்டுக் காணப்பட்டன. தமிழரசுக்கொடிகள் ஆங்காங்கே பட்டொளி வீசிப் பறந்து அனைவரையும் வரவேற்றன.

மாநாட்டுக்காக வருகை தந்திருந்தோரின் உணவு ஒழுங்குகளையும் தங்குமிட வசதிகளையும் யாழ். மாநகர சபை உறுப்பினரும் வரவேற்புக் குழுத் தலைவருமான திரு. நா. த. செல்லத்துரை சிறப்புடன் செய்திருந்தார்.

## நிகழ்ச்சிகள்

29: 1. 72 பிற்பகல் 2மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள 'கனக பவனத்தில்' ஆரம்பமான விடயாலோசனைக் கூட்டம் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக இடம் பெற்றது. விடயாலோசனைக் கூட்டத்துக்கு தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமை தாங்கினார். தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர். தந்தை செல்வா அவர்கள் மிகவும் உணர்ச்சியுடனும், தெளிவாகவும், உறுதியாகவும் இன்றைய ஆபத்தான நிலையினையும் கட்சியும் தமிழினமும் அடுத்து எடுக்க வேண்டிய நெருக்கடியான கட்டங்களை தமக்கேயுரிய தமிழில் எடுத்துரைத்தார். மிகவும் சூடாக நடைபெற்ற இவ்விடயாலோசனைக் கூட்டத்தின் இறுதியில் மறு நாள் மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய அரசியல் தீர்மானம் உருவாக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்து கட்சி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு ஒரு 'நடவடிக்கைக் குழு' அமைக்கப்படவேண்டுமென்றும், அந்தக்குழுவை அமைக்கும் பொறுப்பை தந்தை செல்வாவிடம் ஒப்படைப்பதென்றும் விஷயாலோசனைக் குழு முடிவு செய்தது.

## அரசியல் மாநாடு

அரசியல் மாநாட்டு நிகழ்ச்சிகள் 30. 1. 72 காலை 10 மணிக்கு மாநகர சபை மண்டபத்தில் ஆரம்பமாயின. செல்விகள் அங்கப்பா சகோதரிகள் 'எங்கள் ஈழத் தமிழ்நாடு' எனும் எழுச்சிக் கீதத்தை இசைக்க, தமிழரசுக்தந்தை செல்வா அவர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார். தந்தை அவர்கள் கொடியேற்றி வைக்கும் போது, இயற்கையும் உளம் கனிந்து மழைத் துளிகளை தூவி தமிழரசு மாநாட்டுக்கு வாழ்த்து தெரிவித்தது.

இதையடுத்து 'அமரர் நாகநாதன் அரங்கில்' அரசியல் மாநாடு ஆரம்பமாகியது. மண்டபம் முழுவதும், இலங்கையடங்கிலுமிருந்து வந்திருந்த பிரதிநிதிகளால் முட்டி வழிந்து கொண்டிருக்க திரு. நா. த. செல்லத்துரை எம். எம். சி. அவர்கள் தனது வரவேற்புரையை நிகழ்த்தினார்.

இதன் பின் தலைவர் இராசமாணிக்கம் தமது தலைமைப் பேருரையைப் படித்தார். தலைமையுரைக்குப் பின், நிறைவேற்றப்பட வேண்டிய அரசியல் தீர்மானத்தை தந்தைசெல்வா முன்மொழிய [illegible] திரு. நேமிநாதன் வழிமொழிந்து [illegible] மானத்தை தெளிவு படுத்தி பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் நல்லதோர் தெளிவுரை நிகழ்த்தினார். பின்னர் தீர்மானத்தின் மீது திருவாளர்கள் அ. தங்கத்துரை, எக்ஸ் எம். செல்லத்தம்பு, வ. பாலசிங்கம், கெங்கரத்தினம், அறப்போராளித் தலைவர் அரியநாயகம், டிவோட்டா, வே. கயிலாயபிள்ளை, உட்பட பலர் உரையாற்றினர். இதனையடுத்து தங்கள் கருத்துக்களை கூறுவதற்கு சபையோருக்கு சந்தர்ப்பம் தரப்பட்டது. இறுதியில் அரசியல் தீர்மானம் ஏகமனதாக பலத்த கரகோஷத்தின் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## மாலை நிகழ்ச்சிகள்

மாநாட்டின் மாலை நிகழ்ச்சி, பிற்பகல் 4.30க்கு கவியரங்கத்துடன் ஆரம்பமாகியது. கவிஞர் அடலேறு மு. ஆலாலசுந்தரம் கவியரங்குக்கு தலைமை தாங்கினார்.

'எம்மால் ஏன் முடியாது?' எனும் தலைப்பில் கவிஞர் ஆ. வே. ஐயாத்துரை, முத்து சிவன், காரைக்கிழார், சக்தி பாலையா, காசி. ஆனந்தன் ஆகியோர் கவிதை பாடினர்.

இதன் பின் பொதுக் கூட்டம் தலைவர் இராசமாணிக்கம் தலைமையில் ஆரம்பமாகியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், தமிழரசுத் தந்தை செல்வா அவர்களின் உறுதியும், எழுச்சியும், உணர்ச்சியும் மிக்கபுதிய புறநானூற்று வரிகளை பலத்த கரவொலியெழுப்பி மக்கள் வரவேற்றனர். பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம், மாநாட்டுத் தீர்மானத்தை பொதுமக்களுக்கு சமர்ப்பித்து நீண்ட உரையாற்றினார்.

திருவாளர்கள் க. நடராசா, எக்ஸ். எம். செல்லத்தம்பு, வி. தர்மலிங்கம், க. துரைரத்தினம், க. குணராஜா, திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், உட்பட பலர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். இத்துடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

தமிழரசு சிறப்பு மாநாடு தமிழினத்திற்கு பேரெழுச்சியை ஏற்படுத்திவிட்டது.

## அண்ணா விழா

உருத்திர புரத்தில் திரு வே. கணேசபிள்ளை தலைமையில் அண்ணா விழா 8-2-72 மாலை நடைபெறுகிறது.

## நினைவில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைப் போரின் வடுக்களைத் தாங்கிக்கொண்டே தமிழினத்தின் இடும்பை தீர்க்க எழுந்தோடி வந்தவர்கள்—எத்தனையோ சுகங்களை இழந்தவர்கள். தமிழினம் என்றோ ஒருநாள் அரசியல் அறுவடைவைத் துய்த்திட வாய்ப்புக்கிடைக்கும் வேளையில் துரைத்தனம் செலுத்திட யோக்கியதை படைத்தவர்களும் இவர்களே. இந்த உண்மைகளை டொக்டர் மறந்தாரில்லை. இதனால் கனதனவான்களை நிராகரித்துவிட்டு இக்கர்ம வீரர்களை மதித்தார்.

முடிவுரை:

டொக்டரின் மறைவினால் பேதலித்த என் உணர்வுகளுக்கு நிவாரணமளிக்க நினைந்து என் நினைவிலே தேங்கிய நினைவுகளை எழுதத் தலைப்பட்டேன். இன்னும் ஓராயிரம் சம்பவங்கள் அவ்வப்போது நிமிர்ந்து பார்க்கும்; அவற்றை எழுத இடம் போதா. இக்கட்டுரையை நான் தொடர்ந்திட்ட வேளையில் முழுமையான முனுமுனுப்புகளைச் செவிமடுத்திருக்கிறேன். இவர்களுக்கு கட்டுரை இறுதியில் விடையிறுக்கவே எண்ணினேன். இடம் போதாது. இக்கட்டுரைகள் நூல்வடிவில் வெளிவரவேண்டுமென நண்பர்கள் சிலர் கூறினர். அது தப்பித் தவறிக் கைகூடுமானால் இந்த முனுமுனுப்புகளை விரிவாகச் சந்திக்க முயல்வேன். சுதந்திரன் ஆசிரியர், அலுவலர், வாசகர் அனைவருக்கும் நன்றி.

(முற்றும்.)

யோகக்கலை

'யோக பலத்தினும் சிறந்த பலமில்லை
ஞான ஒளியினும் சிறந்த நண்பனில்லை
மாயையினும் கொடிய தளை இல்லை
ஆணவத்தினும் கொடிய பகை இல்லை.'

—விரத்த ஸம்ஹிதை.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 15 அனுப்பி விளக்கப்படங்களுடன் கூடிய யோகக்கலை என்னும் சிறந்த நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசீஸ் அவர்களே மலையக தமிழனை இனியும் ஏமாற்றக் கனவு காணாதீர்!

வருகிறார், வருகிறார் ராஜாதி ராஜன், சூராதி சூரன் என்றெல்லாம் இப்பகுதியில் நடைபெறும் நாடகங்களில் 'கட்டியக்காரன்' கூறுவதும், வரும் ராஜனையும், அவனது கோல உடையையும், ராஜ கெம்பீர நடையையும் காண மக்கள் ஆர்வத்துடன் எழுந்து பார்ப்பதும் வழக்கம். இவ்வாறு கட்டியம் கூறுபவனை கோமாளி என்று கூறுவர்கள்.

இதைப்போல சமீபகாலமாக சில தமிழ்கோமாளிகள் அரசாங்கம் என்ற கோமாளியுடன் சேர்ந்துகொண்டு, அதோ வருகிறது, இதோ வருகிறது, தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க போகின்றது: இனி மலையக மக்களுக்கு விமோசனந்தான் என்று கூறிக் கூப்பாடு போட்டு வந்தனர்;

ஆனால் கோல உடையுடனே, கோமகன் வருவான் கண்கொள்ளாக்காட்சியைக் காணப்போகின்றோம் என்று ஆவலுடன் எதிர்பார்க்கும் நாடக ரசிகர்களைப்போல இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரு சாரார், மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்கள்—ஆவலுடன் பார்த்து பார்த்து இப்போது வெறும் கோவணத்துடன் வந்து கொண்டிருக்கும் செய்தியைத்தான் கண்டனர்;

முதல் 38 பின்னர் 304 தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கப் போகின்றது; மலையக மக்களின் கல்வி வளர்ச்சியை துரிதகெதியில் உயர்த்தப் போகின்றது என்றெல்லாம் பேசினர், எழுதினர், ஆனால் நடந்ததென்ன?

''நிதி வசதி இடந்தராத படியால் தோட்டப்பாடசாலைகளை எடுப்பதில்லை'' என்ற அரசாங்கத்தின் செய்தியால்;

இவ்வாறு செய்தி வந்தும் கூட அசீஸ் அவர்கள் விட்டபாடில்லை. இனி மலையக மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படப்போகின்றது. அரசாங்கம் பாடசாலைகளை பொறுப்பேற்றுக்கொள்வது உறுதி என்று கூறிவருகிறார்;

ஆனால் எப்போது எடுக்கப் போகின்றது என்று மட்டும்

## மலையகத்திலே........

கூறுகிறார் இல்லை; அரசாங்க செய்தியைப் படித்த பின்னும் திரு. அசீஸ் அவர்கள் பொறுப்பேற்கப் போகின்றோம் போகின்றோம் என்று கூறுவது விந்தையாகவிருக்கிறது.

தெரிந்துகொண்டே இப்படி கூறுகிறாரா? அல்லது இன்னும் கொஞ்சம் ஏமாற்றிப் பார்ப்போம் என்று கூறி வருகிறாரா என்பது அவருக்குத்தான் வெளிச்சம்;

''இந்நாட்டில் தொழிலாளர்கள் மீது அக்கறையுள்ளவர்கள் யாருமில்லை. நான் 17/50 பெற்றுத்தரப் போகின்றேன்'' என்று ஜம்பம்பேசி அந்தச் சமயத்தில் சரிந்து கொண்டிருந்த செல்வாக்கை காப்பாற்றிக்கொண்டார்.

இப்போது சம்பள உயர்வு, அதுவும் மாதச்சம்பளம், ரூபா 142 கிடைக்கும் இனி தொழிலாளர்களின் வாழ்வில் துன்பம் இருக்க முடியாது, துயரம் ஏற்பட முடியாது என்று கட்டியம் கூறுகிறார் அசீஸ். திரு. அசீஸ் அவர்களின் பேச்சுப்படி நடக்குமா?

இந்நாட்டுத்தொழிலாளர்கள் எல்லோருக்கும் 17/50 கிடைக்கும் போது பிரஜா உரிமையற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும்தானே 17/50 கிடைக்கவில்லை: இவர்களுக்கு உரிமையிருந்தால் அது உடனடியாக கிட்டுமே என்று சற்றுக் கூட எண்ணவில்லையே இந்த அசீஸ் அவர்கள்' ஆனால் 17/50 வேண்டும் என்று கூறுகிறார்.

அரசியல்நிர்ணயசபையில் எனக்காக வாதாடுவதாக ஜம்பம் பேசிவிட்டு தனது பதவியை, நியமன பாராளுமன்ற உறுப்பினர் பதவியை காப்பாற்றிக்கொள்ள பயந்தாரே அதைப்பற்றி ஒரு வார்த்தையும் தொழிலாளர்களிடம் கூறுது. அந்தச் செய்வேன் இதைச் செய்வேன் என்று கூப்பாடு போடுகின்றாரே?

''பிரஜை'' என்பதற்கு பதிலாக ''ஆள்'' என்று அரசியல் சட்டத்தில் இல்லாதபடியால், இந்தியப் பாஸ்போர்ட் வாங்கக் கண்டிக்கு செல்வதற்குக் கூட பாஸ்போர்ட் வாங்கி பிரயாணம் செல்லவேண்டிய காலம் வரப்போகின்றதே அதைப் பற்றி ஏதாவது சொல்கின்றாரா? இந்நாட்டு பொருளாதாரத்தை உற்பத்தி செய்து கொடுக்கும் உழைப்பாளி மக்கள் சுதந்திரத்துடன், தன்மானத்துடன் இருக்க பேச்சு உரிமை கூட மறுக்கப்படவிருக்கின்றதே அதைப்பற்றி ஒரு வார்த்தையும் கூறமாட்டார். ஆனால் தனது செல்வாக்கை, பதவியை காப்பாற்றிக்கொள்ள மட்டும் இல்லாததையும் பொல்லாததையும் சொல்கிறார்: இதையும் நம்பி மலையக தொழிலாளர்கள் இருப்பது சரியா?

சிலரை சிலகாலம் ஏமாற்றலாம், பலரைப் பல காலம் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாதென்பதை இன்னும் உணராமல் இருக்கிறார்;

எமது மானத்தையும், மரியாதையையும், மதிப்பையும் காப்பாற்றுவார்கள் என்றெல்லாம் எதிர்பார்த்த இவர்கள் இப்போது தங்களது மரியாதையையும் பதவியையும் காப்பாற்றிக்கொள்கின்றனரே தவிர எம்மைப் பற்றி சற்றும் சிந்திப்பதில்லை;

எனவே நாம் சரியான வழி நாடி செல்வதைத் தவிர வேறு வழியில்லை.

'டிக்கோயா மலர்விழி'

# புதிய அரசியல் திட்டத்தால் மலையகத் தமிழனுக்கு வரவிருக்கும் ஆபத்து

சிவபாக்கியம் குமாரவேல்
(தலைவி: மலைநாட்டு மங்கையர் கழகம்)

இந்நாட்டுத் தமிழினத்தின் அடிப்படை ஜீவாதாரமான உரிமைகளை அரசு மறுத்து வருகின்றது: மொழியுரிமை படிப்புரிமை, தொழில் உரிமையின்றித் தவிக்கின்றது தமிழினம்.

கூட்டுறவுச் சங்கக் கடைகளிலாகட்டும், பண் தரிப்பு நிலையங்களிலாகட்டும், இன்னும் அதிமுக்கியமானவற்றில் எல்லாம் இன்று சிங்கள மயமே! இதனால் ஆங்கிலமோ, சிங்களமோ தெரியாத மக்கள் என்னவென்று எதைப் புரிந்துகொள்ளமுடியும்?

இலங்கைபோன்ற ஒரு நாட்டுக்கு, அதிலும் 'சோஷலிசம் பேசும் ஒரு நாட்டுக்கு 'மதச்சார்பின்மை' மிக அவசியமாகின்றது. இதற்கு மாறாகத் தனிச்சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசியல் சட்டம் நடைமுறைக்கு வருமானால், சிறுபான்மை மக்களின் ஜீவாதாரமான உரிமைகள் அனைத்தும் பறிபோய் அடிமைப் படுகுழியில் தள்ளப்படுவது நிச்சயம். இவ்விதம் ஈழத்தமிழினம் இடர்பட்டுக்கொண்டு கையேந்தி மன்றாடி நின்ற காலம் மலையேறிவிட்டது; ''தமிழர்களாகிய நாம் செய்த பாவம் ஒன்றுமேயில்லையே? 'தமிழர்கள்' என்ற ஒரே ஒரு காரணம்தானா?

இதுமட்டுமல்ல, இங்குள்ள மலையகத் தமிழர்களை எடுத்துக்கொண்டால், உழைத்துழைத்து உருக்குலைந்தார்களே தவிர வேறோர் பலனையும் கண்டறியான். இந்நாட்டுக்கு வஞ்சகமில்லாத உழைப்பாளி அவன்! நாடற்றவன், உரிமையற்றவன், கள்ளத்தோணி என்றெல்லாம் வஞ்சிக்கப்படுகின்றான்! புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் திட்ட நகலின், அறுபத்தேழாவது பிரிவு அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பிருந்த பிரஜாவுரிமை, பிரஜைகளின் உரிமைகள் தொடர்பான சட்டங்கள் தொடர்ந்து அமுலில் இருந்துவரும் என்று கூறுகின்றது.

இதன்படி பதிவுசெய்யப்பட்ட எந்த ஒரு நபரினதும் பிரஜா உரிமையை (புதிய அரசியல் திட்டத்தின்கீழ் அரசாங்கம் விரும்பினால் ரத்துச்செய்துவிட முடியும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இந்தவிதி வம்சாவழிப் பிரஜைகளைப் பொறுத்தமட்டில் இல்லையாம். இப்பொழுது அமுலில் இருந்துவரும், [illegible] பிரஜா உரிமைச் சட்டத்தின் பிரிவையே, புதிய அரசியல் திட்டப் பிரிவும் அடிப்படையாகக் கொண்டு இருப்பதாகத் தெரிகிறது;

இச்சட்டத்தின்படி தேச-சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் காணப்படும் பதிவுப் பிரஜைகளின் உரிமை ரத்துச் செய்யப்படலாம்; இவ்வாறு, வம்சாவழிப் பிரஜைக்கொரு நீதி - பதிவுப் பிரஜைக்கொரு நீதி ஏன்?

படிப்படியாகப் பலதுறைகளிலும், மலையகத் தமிழர்களுக்கு அரசு இழைத்துக் கொண்டிருக்கின்ற கொடுமைகள் சொல்லுந்தரமன்று!

இலங்கைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்த பலர் அதை வாபஸ் பெற்றுள்ளனர். காரணம் அரசின் போக்குக்கு மலையகத் தமிழர்கள் அஞ்சுவதே! மானத்தோடு தங்களின் சொந்த நாட்டிற்குச் சென்று மடிவதே சாலச் சிறந்ததெனக் கருதுகின்றனர்.

ஈழம்வாழ் தமிழினத்திற்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் கடும் சோதனைமிக்க இக்கட்டத்தில், வடக்கத்தியான், தெற்கத்தியான், யாழ்ப்பாணத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன், மலையகத் தமிழன், என்ற பேதங்களும் பிரிவினைகளும் நீங்கி, தமிழன் — தமிழ்மொழி யென்ற ரீதியிலே, ஒன்றுபட்டு உரிமைக்குரல் எழுப்பத் தயாராக வேண்டும்; ஒன்றுபட்டாலே தமிழினத்திற்கு விமோசனமுண்டு. ஆயிரம் உண்டு இங்கு சாதி - எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி? ஓர் தாயின் வயிற்றிற் பிறந்தோர் தம்முள் சண்டைபிடித்தாலும் சகோதரர்கள் அன்றோ? எங்கோ ஒரு தமிழன் அவமதிக்கப்படுகின்றான் என்றால், அது உலகத் தமிழினத்திற்கே அவமானம்! 'மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே.'

தமிழர்கள் தங்கள் சுயநலத்திற்காக, கௌரவம்

(7ம் பக்கம் பார்க்க)

# கினிகத்தேனைத் தமிழ்ப் பிரிவு உயர் வகுப்புகளுக்கு மூடுவிழா!

'புத்தொளி'

கினிகத்தேனையில் தமிழ் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு ஒரே ஒரு பாடசாலையாகத் திகழ்வது கினிகத்தேனை சிங்கள ஆரம்ப பாடசாலையுடன்சேர்ந்து நடாத்தப்படும் தமிழ் பாடசாலையேயாகும்; இத்தமிழ் பிரிவில் ஆரம்ப வகுப்பிலிருந்து சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்புக்கள் வரை கடந்த ஆண்டு இருந்தன: ஜி: ஸி. ஈ. அரசாங்கப் பரீட்சைக்கும் மாணவர் கடந்தாண்டு தோற்றினர்: இப்பகுதித் தமிழ் பிள்ளைகளுக்கு வேறு பாடசாலை எதுவும் சுமார் 8 மைல் தூரத்தில் இல்லை என்பதும் குறிப்பிடத்தகும்; இப்பாடசாலையில் கல்வி கற்க வாய்ப்பில்லையானால் பிள்ளைகள் இங்கிருந்து 12 மைல் தூரத்திலுள்ள அட்டனுக்கு, அல்லது 8 மைல் தூரத்திலுள்ள நாவலப்பிட்டிக்குத்தான் செல்ல வேண்டும். தோட்டப்பகுதி மாணவர்கள் நெடுந்தூரம் பஸ் செலவு கொடுத்துப் பிரயாணம் செய்து படிக்க முடியுமென எவரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

தமிழ் பிள்ளைகளுக்குக் கினிகத்தேனை தமிழ் பாடசாலை இதுவரை உயர்தர வகுப்புக் கல்விவரை அளித்து வந்தது. அந்த வாய்ப்பும் இப்பொழுது முற்றாகத் தடுக்கப்பட்டுவிட்டது. இவ்வகுப்புக்களை இவ்வாண்டு வழமையாக நடாத்துவதுபோல் நடாத்துவார்கள் என்ற நம்பிக்கையில் மாணவர்கள் பாடசாலைக்கு வந்தனர்; அப்படி வந்த மாணவர்கள் சிங்கள தலைமையாசிரியரின் அறிவித்தல் கண்டு திகைப்படைந்துள்ளனர். இப்பாடசாலையில் 8ம் வகுப்புக்கு மேல் இனி வகுப்புக்கள் நடாத்தப்படமாட்டா தென்று தலைமையாசிரியர் அறிவித்தார் இம்மாதம் 4ம் திகதி.

எட்டாம் வகுப்புக்குமேல் வகுப்புக்கள் நடாத்த முடியாதென்பதற்கு அவர் கூறிய ஒரே காரணம் மேல் வகுப்புக்களுக்குப் போதிய மாணவர்கள் இல்லை என்பதே: கடந்த ஆண்டும் உயர் வகுப்புக்களில் போதிய மாணவர்கள் இருக்கவில்லை. அப்படி இருந்தும் வகுப்புக்கள் நடந்தன: ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கும் மாணவர்கள் தோற்றினர்: இவ்வாண்டு இப்படியாக திடீரென அறிவித்து மாணவர்களைப் பாடசாலைக்கு வரவேண்டாமென்று கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு உள்நோக்கமுமொன்றிருக்க வேண்டும்.

சிங்களப் பிரிவில் ஆரம்ப வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரையே நடாத்தப்படுகின்றது: தமிழ் பிரிவில்தான் இதுவரை ஜி: ஸி. ஈ. வரை வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. படிப்படியாக இங்கும் வகுப்புக்களைக் குறைத்து விடுவதற்கு இது முன்னோடியாக இருக்கலாமென்று அஞ்சப்படுகின்றது.

கடந்தாண்டு மாணவர்களுக்கு அறிவித்தல் கொடுத்திருந்தால் வேறுபாடசாலைகளில் சேருவதற்கு வசதி படைத்தவர்கள் விண்ணப்பித்திருப்பார்கள்; இப்போ அறிவித்தல் கொடுத்ததும் மாணவர் இருதலைக்கொள்ளியாகச் செய்வதறியாது திகைத்திருக்கின்றனர். இவர்கள் இனி உயர் கல்வி பெற வாய்ப்பின்றி வீடுகளில் இருக்கவேண்டி ஏற்பட்ட துர்பாக்கிய நிலையைப் போக்க மலையகத் தலைவர்கள் முன்வரமாட்டார்களா? தலைவர்கள் உடனடியாக [illegible] இம்மாணவர்கள் விமோசனம் அடைவர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நிற்பவை

## 20. சாதாரண மனிதனின் சங்கதி

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஐம்பதுக் கைம்பது கோரிக்கை அஸ்தமித்து விட்டவொரு குரல்; வாழப் பிறந்த சிரஞ்சீவிக் காவியமல்ல அது. ஆடி முடிந்து விட்ட நாடகம்; ஆழப் புதைந்து அகழ்வாராய்ச்சிப் பொருளாகி விட்ட அழகழிந்த ஓவியம். இந்த உண்மையை உணர்ந்த இற்றைத் தமிழரசுத்தலைவர்கள் அன்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்தபோது சமஷ்டித் தத்துவம் என்ற இணைப்பரசுத் திட்டத்தைக் கூனிப்போன தமிழர் வாழ்வு நிமிர்வதற்கான நிலைக்களன் எனக் கண்டனர். டொக்டர் நாகநாதனும் ஏனைய தலைவர்களும் சமஷ்டியாட்சித் திட்டத்தைத் தொட்டும் துணைக்கழைத்தும் பேசினர்.

### கொக்கரிப்பு:

இற்றை நாட்களில் சமஷ்டித் திட்டத்தைத் திட்டித் தீர்த்திட்ட தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அன்று பட்ட மரமல்லவே; பழுத்த மரமாயிற்றே; 'சமஷ்டியரசு சரிப்பட்டு வராது' எனச் சுட்டிக் காட்டியிருக்கலாமே முளை விட்டபோது மூடிக்கிடந்த வாய், சமஷ்டிக் கோரிக்கை கிளைவிட்டு எழில்மொட்டு மலர்ந்திட்ட நேரத்தில் குட்டிச் சுவரால் எட்டிக் கொக்கரித்தது.

தமிழ்க்காங்கிரசின் செயலாளராகவிருந்த நாட்களிலேயே சமஷ்டியரசின் சான்றாண்மையைச் சாற்றியவர் டொக்டர். உதாரணமாக, 1947 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 4 ஆம் தேதி செனட் சபையில் பேச எழுந்த டொக்டர், தாம் தொட்டுப் பேசிய தலைப்பின் (இலங்கைச் 'சுதந்திரம்' பற்றியது) தொடர்பில் சமஷ்டியரசையும் தட்டிக்கொடுக்கிறார். உரையின் பகுதி பின் வருமாறு:—

''...உருஷ்ஷியாவில் இன்று 200 வேறு பட்ட இனங்கள் இருக்கின்றன. அவை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. எங்ஙனமாகில் இனப்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் சமூகப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் அதன் சொந்த சமஷ்டி அரசியலமைப்பு இருக்கிறது... அவர்களது நாளாந்த வாழ்வில் தாம் சுதந்திரமானவர்கள் எனவும் தம்மீது எவ்வித ஆதிக்கமும் இல்லையெனவும் அவர்களால் உணர முடிகிறது...''

—நாடாளுமன்ற அறிக்கை மூதவை; பாகம் 1; பக் 359)

### செங்கோட்டு நிலை:

1950 ஆம் ஆண்டு திரு: ஆர். கதிராமர் தலைமையில் கல்குடாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய டொக்டர், ''சிங்களவர் மேலும் தமிழர் கீழும் என்ற அடிப்படையில் கிடை நிலையிலான (horizontal division) அதிகாரப் பிரிவினையை சகித்துக் கொள்ள மாட்டேன். சிங்களவரும் தமிழரும் அக்கம் பக்கத்தில் என்ற அடிப்படையில் செங்கோட்டு நிலையிலான (vertical division) பிரிவினையே எனக்கு வேண்டும்'' என அழகாகவும் ஆழமாகவும் ஆங்கிலத்தில் முழங்கிய நேர்த்தி நினைவுகூரத் தக்கது.

### குதிரை விற்பனை:

சிறிமா—சாத்திரி உடன்படிக்கையை ''குதிரை விற்பனை'' (Horse deal) என விமர்சித்த டொக்டர் 1965ல் தமிழரசுக்கட்சி யூ. என். பி. அரசுடன் உடன்பாடு கொண்டமையை ''போர் நிறுத்தம்'' (ceasefire) என வருணித்தார். சிறிமா-சாத்திரி உடன்படிக்கையைச் செயற்படுத்தும் சட்டவாக்க விடயத்திலும், 1965—1970 காலப் பரப்பில் அரசோச்சும் விடயத்திலும் யூ. என். பி. யுடன் தமிழரசுக்கட்சி கண்ட உடன்பாடு எனக்கு உடன்பாடற்றது; நான் பணிவுடன் பிணங்கி நின்றேன். இதனை டொக்டர் உட்பட தலைவர்கள் பலரும் அறிவர். எனினும், மேற்குறித்த நறுக்கான விமர்சனங்கள் மிகவும் கவர்ச்சிகரமானவை. குறிப்பாக, சிறிமா—சாத்திரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வேளையில் ''தமிழ் இலங்கைமேல் கைவையாதே'' (Hands off Tamil ceylon) என சாத்திரிக்கும் சிறிமாவுக்கும் டொக்டர் விடுத்த எச்சரிக்கை என்னை மயிர்க் கூச்செறிய செய்தது;

★ ★

### கட்டாக்காலி

பல்லாண்டுகளுக்கு முன் ஒருநாள் பம்பலப்பிட்டியில் காலி வீதிக்கு நடுவே அமைந்துள்ள திட்டின் வழியே நடந்து சென்று கொண்டிருக்கிறேன். கட்

—கரிகாலன்—

டாக்காலிக் காளைபோன்று கொழும்பு வீதியெல்லாம் மேய்ந்துகொண்டிருந்த நாட்கள் அவை. பிற்பகல் 2 மணியிருக்கலாம். பழைய காக்கிக் காற்சட்டையொன்றின் மேலே நைந்து நலிந்து போன 'புஷ் சேட்' வியர்வையின் தெப்பமாக நனைந்து போயிருக்கிறது. வாரப்படாத தலைமயிர் 'திலிப் குமார்' பாணியில் விடுகாலியாக நெற்றியில் பெரும் பாகத்தை வேய்ந்து கொண்டிருக்கிறது. வாரறுந்த செருப்பு ஒரு சோடி. என் கால் விரல்களின் இணைப்புகளே தஞ்சமாக என் திருவடிகளைச் சுமந்துகொண்டிருக்கிறது. வியர்வையைத் துடைப்பதற்கு காற்சட்டைப்பையுள் கையைச் செலுத்துகிறேன். அங்கு கைக்குட்டை இல்லை. முகவாய்க் கட்டையை இங்குமங்கும் அசைத்து தேய் மூட்டுச் சட்டையின் இரு மருங்கிலும் துடைத்துக் கொள்கிறேன்.

### சங்கடம்:

'டேய் தம்பி!' குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்புகிறேன். டொக்டர் தான்; காரைத் திட்டின் ஓரத்திலிருந்து தெருவின் ஓரத்திற்கு நகர்த்தி நிறுத்துகிறார்; 'ஏறடா...... விரைவாக...... உம்......' என்கிறார். 'எங்கே போகிறீர்கள்?' என்கிறேன். 'கேள்வி கேட்காதே... உடனே ஏறு என் ஆணைக்குக் கீழ்ப்படி' (obey my order) என்கிறார் இராணுவ மிடுக்குடன் — நகைச்சுவையுடன் தான். எனக்கு வேறென்ன வேலை? ஏறிக்கொள்கிறேன் வண்டியில். நான் இருக்கும் அலங்கோல நிலைதான் எனக்குக் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. இருப்பினும், என்ன? வண்டியுள் தானே இருக்கிறேன். எவர் கவனிக்கப் போகிறார்? என்றோர் ஆறுதல். வண்டி நாடாளுமன்றம் நோக்கிச் செல்கிறது! 'வா... ஏதாவது குடித்துவிட்டுப் போவோம். [illegible] நாடாளுமன்றக் கூட்டம் இல்லை' என்ற தைரியத்திலும் மறுத்தால் ஏச்சு விழுமே என்ற அச்சத்தாலும் எனது 'தோற்றப் பொலிவை' சுற்று முற்றும் அடிக்கடி பார்த்தவாறே நாணிக்கோணிப் பின் தொடர்கிறேன். சிற்றுண்டிச் சாலையினுள் நுழைகிறோம்; அங்கே....

### அலங்கோலம்:

அங்கே டொக்டர் என். எம். பெரேரா, திரு. வெஸ்லி குணவர்த்தனா, திரு. பெர்னாட் சொய்சா, திரு. கெனமன் இவர்கள் ஒரு நாற்காலியைச் சுற்றியிருந்து பேசிக்கொண்டிருந்தவர்கள், டொக்டரைக்கண்டதும் முகமன் கூறி வரவேற்கின்றனர்; எனக்குத்திகைப்பாகிவிட்டது; என் 'தோற்றப் பொலிவை' மீண்டும் தரிசித்துக் கொண்டே ஒதுங்கி நிற்க முனைகிறேன். டொக்டரோ நேரே சென்று அவர்களுடன் அமர்ந்து கொண்டே, ஆறாவது கதிரையொன்றையும் அந்தக் கூட்டத்திற்குள் இழுத்துத் திணித்துக்கொண்டே அதில் அமர்வதற்கு என்னையும் அழைக்கிறார். அதுமட்டுமல்ல, அவர்களுக்கும் என்னை வேறு அறிமுகம் செய்துவைக்கிறார்; டொக்டர் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது எனக்கு! அவர்கள் என்னுடன் கைகுலுக்க தம் கையை நீட்டியபோது அழுகையே வந்துவிட்டது.

### அனுபவம்:

இன்றும் கூட நாலு பெரியவர்கள் மத்தியில் சிக்கிவிட்டால் நான் மிகவும் சங்கடப்படுவதுண்டு. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு — அதிலும், அந்த அலங்கோல நிலையில்—நானுற்ற அனுபவம் சொல்லுந் தரத்ததன்று. டொக்டரைச் சபித்துக்கொண்டேன் நான். இப்படி என்னை மனிதர் காட்டிக் கொடுப்பார் என்று நான் கனவிலும் கருதவில்லை; இந்த இலட்சணத்தில், தாம் 'அரசியலமைப்பு மரபுகள்' பற்றி (Constitutional conventions) நூலொன்று எழுத இருப்பதாகக் கூறிய டொக்டர் பெரேரா அது பற்றி சிலாகித்துப் பேசிக்கொண்டிருந்தார். மரியாதைப் பான்மையில் என்னையும் அவ்வுரையாடலில் ஈடுபடுத்தி—என்னை நோக்கியும் பேசினார். இது என் இக்கட்டான நிலையை இரட்டிப்பாக்கிற்று. ஒருவாறு உரையாடல் முடிந்து அவர்கள் விடைபெற்றுச் சென்றனர். தனியே நின்ற டொக்டரிடம் என் அவமான உணர்வுகளையெல்லாம் கூறி அந்தக் கோலத்தில் என்னை அங்கு இட்டுவந்த பொல்லாத்தனத்தையும் சுட்டிக் காட்டினேன்; மனிதரோ, 'தமிழன் இப்படித்தான் சிங்களவனைக்கண்டு பயந்து பயந்து சாகிறான்.... நாங்கள் ஒரு பெரும் இனத்தவர் என்று நினைப்பதில்லை; எப்பவும் (அடங்கி துடங்கி கோணிக் காட்டி) இப்படித்தான்...... சிங்களவனுக்கு முன்னால் நாங்கள் நிமிர்ந்து நிற்க வேணும். நாங்கள் எவனுக்கும் தலை வணங்கோம்...... உனது மனப்பான்மையை எண்ணி நான் வெட்கப்படுகிறேன்' என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் பொரிந்து தள்ளினார். அங்கிருந்த சிற்றுண்டிச்சாலை ஏவலர் என்னை நினைத்துக்கொண்டனரோ மிகவும் சுறுசுறுப்பாக பானம் பரிமாறினர். 'உன் பயம் தெளியட்டும் — நிறையக் குடியடா' என்றும் டொக்டர் கூறினர்.

### மகனுடன்...

எனது வெளித்தோற்ற அலங்கோலம் என்னை உறுத்திய அளவுக்கு டொக்டரை உறுத்தவில்லையென்பதையும் எனது தர்மசங்கடத்தை அவர் புரிந்துகொள்ளவில்லையென்பதையும் தெரிந்துகொண்டேன். பேசிப் பயனில்லை என நிறுத்திக்கொண்டேன்; எனவே அவர் வண்டி அங்கிருந்து சென்று சபைக்குச் சென்றபோது நான் எனது 'தோற்றப்பொலிவை'த் தரிசித்துக்கொண்டேனாயினும் 'எங்கே? எதற்கு?' என்று எதுவும் கேட்டேனில்லை; அன்று அங்கு திரு: சரத் விஜயசிங்கா என்பவர் செனற் சபைத் தலைவராக உறுதிமொழி எடுத்ததாக நினைவு; அங்கிருந்த சபை அலுவலர் ஒருவரிடம் பார்வையாளர் கூடத்திற்குச் செல்வதற்கான இரு சீட்டுகளைப் பெற்றுவருமாறு கூறிவிட்டு டொக்டர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார்: என்னை அவர் 'மகனே!(Sonny)' என அடிக்கடி விளித்துப் பேசியதற்கு நேரான கருத்தேற்றிய அலுவலர், மீட்டு வந்து டொக்டரிடம் பின்வருமாறு கேட்டார். 'நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராதலால் சிறப்பு விருந்தினர் 'கலரி'க்குச் செல்லலாம். அங்கு செல்ல விரும்புகிறீர்களா அல்லது உங்கள் மகனுடன் அமர விரும்புகிறீர்களா?' என்றார்.

அலுவலரின் தவறான விளக்கத்தைச் சுவைத்துக் கொண்ட டொக்டர் முறுவலித்தவாறே 'நான் என் மகனுடனிருக்க விரும்புகிறேன்.' (I want to be with my son) என்றார். நான் இருந்த நிலையில், இல்லாத உறவு முறையொன்றை ஏற்பதற்கு ஒடுங்காத உளவளம் வேண்டும்; அதை டொக்டரிடம் மட்டுமே கண்டேன். புழுதியை வியர்வையில் குழைத்துப் பூசிக்கொண்டிருந்த கரிகாலனை டொக்டர் கண்டாரில்லை. போலிப் பிரமைகளால் தடுமாறாத அவரின் திருஷ்டியிலே புறத்தோற்றங்கள் புலனாகவில்லை; அவரது மதிப்பீட்டுணர்வு (Sense of values) உயர்வானவை; வேறானவை. அவரது மதிப்பீட்டிலே, கனதனவான்களல்ல, கட்சித் தொண்டர்களே உயர்வானவர்கள்; கணிப்பானவர்கள்;

### தொண்டர்தம் பெருமை:

டொக்டர் குலப்பெருமையும் குடும்பப்பெருமையும் பெற்றவர் — பலவீனன் அல்லன் — இவரிடம் அறிமுகக் கடிதங்கள், கொடுத்து ஆட்களை அனுப்பிவைப்போர் அந்தஸ்துமிக்கோர் அல்ல — அன்றாடங் காய்ச்சிகளே; அவர்களின் ஒரே மூலதானம் அவர்கள் கடைந்தெடுத்த கட்சித் தொண்டர்கள் என்பதே.

### அச்சாணிகள்:

இந்நாட்டின் அரசியற் கட்சிகளின் வரலாற்றிலேயே தன்னலம் மறுத்த இலட்சிய வெறியரான இளைஞர் பட்டாளத்தைக் கட்டியாளும் ஒரே இயக்கம் இன்றும் தமிழரசுக் கட்சியே. இயக்கத்தின் அச்சாணியான இவ்விளைஞர்கள் அரசியற் போராட்ட மரபுகளுக்கேற்ப இயக்கமாகவே குச்சு வீட்டுக் குடிமக்களே. தத்தம் வீடுகளில் எழுகின்ற வேதனைக் குரல்களையும் விம்மலொலிகளையும் புறக்கணித்துவிட்டு, அன்றாட

(5-ம் பக்கம் பார்க்க)

## மாநில சுயாட்சி என்பது.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்தது. இந்தியா உதவிக்குச் சென்றது. ஜனநாயக நாட்டின் தலைவி இந்திரா காந்தி அம்மையார் அங்கே மனிதாபிமான உணர்ச்சியோடு ஜனநாயக நெறியின் அடிப்படையில் முஜிபுர் ரகுமானுக்கு உதவி புரியச் சென்றார்.

நியாயத்தை நானிலத்திற்கு எடுத்துச்சொன்னார்—நாடு பல சுற்றினர்—அந்த நாட்டின் அரசியல் மேதைகளையெல்லாம் கண்டார்—அதிபர்களையெல்லாம் பார்த்தார்—ஏழை எளியோரையெல்லாம் சந்தித்தார். முஜிபுர் ரகுமான் கேட்பதிலே என்ன தவறு? மாநில சுயாட்சியைக் கொடுத்தால்தான் என்ன? என்று வாதிட்டார்; அப்படி அவ்வளவு பெரிய சுதந்திர விடுதலை உணர்வுக்கே கவசமிட்ட ஜனநாயக முன்னோடி பண்டித ஜவகர்லால் நேருவினுடைய திருக்குமாரி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நியாயங்களைப் புரிந்தவர்கள். ஜனநாயகத்தை உணர்ந்தவர்கள். வங்க தேசத்திலே இருக்கின்ற முஜிபுர் ரகுமானுக்காக வாதாடியவர்கள்—வங்கத்திலே மாநில சுயாட்சிக்கோரிக்கை அடிப்படையில் எழுந்த சுதந்திரப் போருக்காகவே தனது இந்தியப் படையையும் அங்கு அனுப்புவதற்குத் தயார் என்று கூறியவர்கள். [illegible]ம் கேட்டதை விட பலமடங்கு குறைந்த நிலையில் (விடுதலையல்ல; சுதந்திரமல்ல) அதிகாரங்களை அதிகமாக்க வேண்டும் என்ற இந்தச் சாதாரண கோரிக்கைக்கு, அந்த ஜனநாயகத் தலைவி சம்மதிக்க மாட்டார்களா? இந்தச் சந்தேகத்தைத்தான் நாம் கிளப்புகிறோமேயல்லாமல் கொடுக்கிறாயா இல்லையா? என்று கேட்கவில்லை; நமக்குத் தெரியும் அவர்கள் எவ்வளவு நியாயவாதிகள் என்று! நமக்குத் தெரியும் அவர்கள் ஜனநாயகத் தொட்டிலிலே தவழ்ந்தவர்கள் என்று! அவர்களுக்காகப் பேசிய நியாயத்தை அந்த அம்மையார் நமக்காகப் பேசமாட்டார்களா என்று நமக்கு நன்றாகத்தெரியும்.

## அசீஸ் அவர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதற்கா, பட்டம்பதவிகள் தங்களை வந்துசேருவதற்காக, தன்மானத்தை மொழியுரிமையை, அந்தஸ்தை இழந்து வாழ அவசியம் ஏற்படவில்லை. தமிழினம் இந்நாட்டில் ஒன்றுபட்டாலே, தமிழன்னையின் கைவிலங்குகள் முறியும்! நமது இன்னல்களும் தீரும். 'நாம் யார்க்கும் அடிமையல்லோம்' நமக்கு அரசு இழைத்துக்கொண்டிருக்கும் அநீதி. கொடுமையெனும் நரகத்தில் வீழ்ந்து மேலும் மேலும் [illegible]படோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


சிலோன் தியேட்டர்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

5வது வாரமாக காட்சி தருகின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) | நெல்சன் (திருமலை) | இம்பீரியல் (மட்டுநகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, நாகேஷ்,

மற்றும் பலர் நடித்த

சுமதி என் சுந்தரி

---

சிலோன் என்டடெயின்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



7வது வெற்றி வாரம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்ட்மன் கலர்) சவாலே சமாளி

---

சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கின்றது



4வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்) — லிடோ (யாழ்நகர்)

சிவாஜி, பத்மினி,
ஸ்ரீகாந்த், நாகேஷ்,
தங்கவேலு, ராகவன்,
—நடித்த—சிவாஜி பிலிம்ஸ்

வியட் நாம் வீடு

லிடோ (யாழ்நகர்) — விஜயா (மட்டுநகர்) — கிங்ஸ்லி (கொழும்பு)



ஜெய்சங்கர் — சகுந்தலா
மனோகர் — ஆனந்தன்
—நடித்த—

சி. ஐ. டி. சங்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில 1972-ம் வருடம் ஜனவரி மாதம் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்